உ

முருகக்கடவுட்டுணை

கௌமாரசமயாசாரியர்களிலொருவராகிய

# அருணகிரிநாதசுவாமிகள்

# புராணம்.

இஃது

## முருகதாசசுவாமிகளென்றும்

திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்

விளங்குகின்ற

## தண்டபாணிசுவாமிகள்

அருளிச்செய்தது

கழுகுமலையிலிருக்கும்

வெங்கடாசலஞ்செட்டியாரும்,

சங்கரபாண்டியவுபாத்தியாயரும்

கேட்டுக்கொண்டபடி

திருநெல்வேலி

முத்தமிழாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றது.

பிரமோதூத௵ தை௴

உ

முருகக்கடவுடுணை.

# அருணகிரிநாதசுவாமிகள் புராணம்.

## பொதுப்பாயிரம்.

### விநாயகர்துதி.

வேதனின்கும்விளங்கவிளக்கிய *
மாதவன்சொல்வரைந்தவன்றாள்பணிந் *
தேதமின்றியிலங்கருணைக்கணோர் *
நாதன்வந்தநலஞ்சொலநண்ணுவாம். (க)

### முருகர்துதி.

ஆறுதிசையேமுகமாய்ச்சமையங்களீராறேயடற்றோளாகி, வீறுபரஞ்சிவமெனசசொல்லிருநூலின்பொருண்முடிவேவியன்றாளாகி, யீறுமுதனடுவின்றியிலங்குகுகப்பெருமானேயெனைநீயன்பாற், கூறுகெனச்சொன்னபடிநின்னருணகிரிசரிதங்குலவச்செய்யே. (உ)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR MADRAS 90

ஆறுசமையத்துக்கடவுளர் துதி.

ஆதவன்சிவனம்பிகைமுரகரியாரு *
மீதமர்ந்தவன் குகனெனுமறுவரையிறைவரா *
கோதகன்றதென்னருணையின்கோபுரத்துயர்ந்த *
போதகன்றிருச்சரிதமெய்ப்பொருடருமபொருட்டே. *

சரசுவதி துதி.

பூமிசையிருந்தபோதனபுனிதநாவகத்திலவாழ் *
மாமியேயுனக்குநூறுவந்தனமவடிமேவலகொண்ட *
சாமியாந்தனைத்தமாற்றந்தவறிடாதுரைக்கலுற்று *
தாமிதிற்பிழைவாராமலருள்வதுன்கடன்கண்டாயே (௪)

அடியார் துதி.

இளங்குரும்பைமுலைப்பரவைகணவன்முன்னுளெடுத்தியம்புமெய்யடியாரொழிற்றுளபோற்றிக, களங்கமில் சீர்க்கவுமாரத்தொகையினுயேன் கழறியவர்தம்மையெல்லாங்கருதிப் போற்றி, யுளங்கனிந்தமாதவத்தாற பிறவாவீட்டிலுற்றவர்களனைவரையுமொருங்குபோற்றி, விளங்குபுகழருணகிரிநாதனென் மெய்ச்சரிதஞ் சிறிதுரைக்கவிரும்பினேனே. (௫)

## பொதுத்தெய்வத்துதி.

கருகலவெளிறிடலாதியாமெண்ணில்கோதுங்களைந்
தெனையாளக், கருணைகிரிநாதன்புகழ்க்காதை நவில்பாட்
லருள்செய்யுமா, லொருமையொடுபன்மைக்குநடுவாகி
யுறவாகியுயிர்கொண்டருளா,வருமமினமனந்தோறுநின்
கினறவணணத்திலவளாதெய்வமே (௯)

பொதுப்பாயிரமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

## சிறப்புப்பாயிரம்.

### விநாயகர்துதி.

ஆகமங்கள்சொன்னாருணைசிகரியிறைறென் *
பாகமுறுமானைமுகப்பணணவனையெணணலுற்றுங் *
கோகனகவேகனமுகக்குட்டியவன்கைகளியின் [றே.
மாகதையைச்செந்தமிழாலவாழ்த்துநலமவாயக்கவென்

### முருகர்துதி.

திருவருணை வல்லாளன்கோபுரத்தின்வடவருகிற்றிக
ழுஞ்சேயைக், குருதிவடிவேர்படையைக்குலமயிலைச்
செஞ்சேவற்கொடியைக்கும்பிட், டருளபொழிகட்குஞ்
சரிவடக்குறமகளைமிசப்போற்றியணியார்கிளளை, யுரு
வெடுத்துநதமிழ்பாடுமொருபுலவன்புகழுநாததற்குன்
னினேனே. (௨)

ஏழிளையனார்க்கும்பொதுத்துதி.

தென்னருணைசகிரியினிலொருகற்றூணிற்றிகழும்
வடவீதியிலோர் சிறியகுன்றிற், றன்னதெனவாகமஞ
சொல்வடமேற்றிககிற் றனதடியாரெனும்பெயரோசாதிப்
பேரா, மன்னவர்தங்தெருவின்மற்றுஞசொல்வாரசொல
லுமவ்விடத்தி லேழுருக்கொண் டாடும்வேளை, யின்ன
லொழித்தெளிதாரு மிளையோன்றன்னை யிறைஞசுகின்
றேனவன்கிளிசசீரியங்கவென்றே. (ந)

அண்ணாமலையார் துதி.

மாலோடயனிகலுந்தினமலையாய்நடுநின்ற *
மேலோனைவணங்கித்துதிமிகவும்பகர்வேமால் *
வேலோனதுகிளியின்புகழவிண்ணோருணர்வதுபோற்
பூலோகருமறியும்படிபுகலப்பெறுமாறே. (௬)

உண்ணாமுலையம்மன் றுதி.

வார்செவிக்குழையாய்வளையணிபெருமான்மகிழுமு
ண்ணாமுலைமாதின், சீர்செறிந்தலர்ந்தகமலமென் மலர்
போற்றிகழபதஞ்சென்னியிற்சேர்ப்பாம், போரசெயும
வுணர்குலமறக் கறுவிப் புலவரைப் புரந்தவேற்புனித,
னோர் செழுங்கரத்திற் கிளியுருவாகி யுறைந்தவன்சரித்
முற்றுறவே. (௫)

(6915)

## வீரவாகுமூர்த்திதுதி.

விற்கொண்டுசரமாரிபொழிமேகமெனநிற்கும் விறல்
வீரவா, கற்கொண்டதிருமேனிதனைநாடியவனன்பரட
லகூறுவாம், பொற்கொண்டுசெயுமாடமலிவீதியருணு
புரிகோபுரத், கிற்கொண்டுவளர்வேலனணிகிள்ளையெ
னுமன்பனிசைநீடவே. (௬)

## அகத்தியமகாமுனிவர்துதி.

தெருளும்பெரியோர்புகழ்தென்பொதியை *
மருவுங்குறுமாமுனியைப்பணிவாம் *
பொருமங்கசவேள்கிளிபுண்படவேன் *
முருகன்கிளிவண்மைமொழிநதிடவே. (௭)

## அருணகிரிநாதர்துதி.

உன்சரிதந்தனைப்பலவா றுலகத்தார்பகர்வதுகேட்டோம்
பொருமன், முன்சரிதந்தனைக்கூட்டிசசொலப்புகுநதே
னவையாவுமுறைபிறழ்ந்தா, லென்சரிதங்கருதியெண்
ணுக்களவுமனநாணுகிலாவெனைத்தள்ளாதே, பொன்சரி
தங்கியகரத்தார்க்கொருமதனுமருணகிரிப்புலவரோறே)

## உண்மை.

முககாலத்துறுசெயலு மறிந்துவப்போனல்லேன்மு
ருகோனைமயிற்பரியின்முன்வரக்கண்டில்லேன், மைக்

காலன்றிகாலிற்றியாமயலொழிந்தோர்க்கிடம் வஞ்சகத்
தாற்றரிக்குமின்மையோடோருமபு தவே, யக்காலத்தரு
ணகிரிநாதனாடசரிதமபிறகவணயோமறபித்தறுவதற்கா
சைகொடுதுணிந்தே, னெக்காலத்தெசசெயலுமிறைவ
னதேயென்னு மியல்புடையாரல்லாதாரிகழ்வதுநிச்சய
மே. (௯

அவனைசயாவிடிலறுவுமசையாதென்றிடலு மாரில
வேளென்றெடுசில நமறியவுரைத்ததுவுஞ், சிவனனை
யதமிழ்முனிநூலையாண்டுசென்றுசெப்புமனாக்கவியெ
னினுந்தெய்வசசார்பெனலுங், கவனமுற்றுங்கலைவாணி
தொழிலெனவேபலலோர் கழறுதலும் பொய்யாகிற்கட
ல்சூழுலகத், தெவனருணகிரிநாதன்சரிதமதைக்கே
ட்டெங்கெவவாறுசொல்லிடினுமெனக்கதுசம்மதமே. *

பிறந்தவுடனருணைபின்போய்க் கபிலைவனைகண்டுபி
றைசூடிகளைப்பணிந்துபின்னடக்கும்வண்ணரு, சிறந்
தகதைகணபதிதன் கரத்துறுகோட்டதனாற் செம்பொன்
மலைமீதெழுதச்செப்பியமாமுனிவன், றிறந்தழைக்கும
பனுவலையுமிகழ்வாருளரேசில்லோர் திரிதருமிப்பூதலத்தி
ற்சிறிதேனுநாணு, தறந்தவிராவருணைநகர்க்கிளிப்புல
வன்கார்தையடியனேன்சொலத்துணிந்ததாச்சரியத்துய
ர்வே. (௰௧)

எத்திசையும்புகழருணைச்சிகரிவடவருகிலெழில்வே லுஞ்சிகிப்பரியுமிலங்கவிளையாடு, முத்திமுதலாமுருக க்கடவுளைக்கைதொழுது முன்னுளிலருணகிரிமுனிவ னெனும்புலவன், சித்தியடைந்தமைமுழுதுந்தெரிந்து ரைக்கத்தக்க திறமபோதாமையிற்றமியேன்சிறிதொரு வாறுரைப்பேன், பத்தியிலானென்றிகழவார்தவம்புரிய ச்செய்வாரவர்வாரிறமாந்துபழுதுறச்செய்வாரோ. *

வரலாறு.

அறிவாயபொருணனவிற்கனவிற்றனேயறிவிகசம மைகொளுசமமைவயங்கள், செறிவானகுருசசொல்ல லகொஞ்சமேலோர்தெரித்தலகொளுசமுலகத்தாரசெப் பலகொளுச, நெறியோடுகலந்தருணகிரிநாதனசீர்நிறை ந்துளகிளியப்பகரவேணெமிகக்காயின், மறியேந்தியோனை மொருசுகனசொல்ல மாமுனிவர்கேட்டதென்றுங்ம னமொப்பாதே. (௰௩)

எண்ணில்பலகோடிதொண்டர்முருகவேளையிறைஞ் சிநிறகவருணகிரியெனனுநறடோத, திண்ணியன்றனத னைபேறடைந்தஞாயந்திகழும்வண்ணமனனுயிர்றசே ரந்தபூர்வ, புண்ணியத்திறசறறறிந்த மடடுஞசொல்வே ன்புறக்கருவியுட்கருவிப்பொருத்தமியாவு, நண்ணிய சைப்பவனுணாத்தாவிதத்தைக்கேட்டா னுனறியேனெ னுபதறகுநாணிடேனே. (௰௪)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

## சாத்துகவிகள்.

## திருநெல்வேலிப்புதுத்தெரு.

மகாராஜராஜஸ்ரீ

தச்சநல்லூர்வன்னியப்பபிள்ளையவர்கள்

குமாரர்

அழகியசொக்கநாதபிள்ளையவர்கள்

இயற்றியது.

மருமலிதிருநெல்வேலிவடக்கனவரததானத், தெருவளர்கண்டபாணி திருப்புகழ்க்காரன்செஞசொன்,முருகதாசனுமாமென்னமுப்பெயர்தரித்தமேலோன், பெருமைதானளவிட்டென்றுற்பேசருந்தகைமைத்தம்மா. க)

மந்தமாருதவரைமுனிவரன்றமிழ்வளரச *
சந்தமாமழைபொழிமுகிலருணையந்தலத்தில் *
வந்தமாதவன்சரித்திரம்விரித்தனன்மாயைப் *
பந்தமாசறுதண்டபாணிப்பெயர்படைத்தோன். (உ)

அடிக்குமுன்னோர்விதிக் குமின்சொற்சுவைக்குமொரு
குறைவுவராதமைத்தோர்பாட்டு,முடிக்குமுன்னந்தாய்
கொடுத்தசேனையெல்லாம்வாங்குதையோமுதிரக்கல்வி
படிக்குமுன்னேதொடுத்தடுத்துக்கேட்போர்கள்பிரமிக்
கும்படிக்குமொவ்வோர, நொடிக்குமுன்னற்கினியகவி
முருகதாசனைப்போலநுவல்வாரியாரே. (௩)

சீதைபிறப்பணிலமணிநிகழ்பழனஞ் சிறந்ததென்ன நு
ணையிற்செப்பு,மோதைசாலபழையதிருப்புகழ்க்காரனு
யருட்குமாரனாலுய்ந்த, காதையைப்புதியதிருப்புகழக்
காரன்கழறிய வுண்மையைக்காண்போர், தானையானு
செந்தினய்கன்பெருமைதனைநினைந்துருகனிச்சயமே.

## குழிப்பு.

தனன தன தான தந்த தனதான

அருணையுயர்கோபுரங்கொ
ணிலைபின்வடபால்விளங்கு
மமலனிசைபாடியுய்ந்த, கிளியாமோ

ரருணகிரிநாதர்முந்து
கதைதனையுலகோரறிந்த
வளவிலவர்வாயில்வந்த, படிபேசா

# சாத்துகவிகள்

திருளறவமாதவன்ற
னரியவிளையாடலின்ப
நிலநிடபுராணமொணறை, யெளிதாயே
யெவருமுணர்வானொருங்கு
கடலின்மடைவாய்திறந்த
தெனவுரைசெயகான்முகிரந்த, தமிழாலே
திருமலையிலேறியன்பு
மிகுமுறுதியாலுருண்டு
சிறிதுமுடலூனமின்றி, யெழுவோன்வேள்
செயமடலிலைவருகநம்
வினைமுழுதுமாறவென்ற
திறமையினன்வேயடர்ந்த, வனமூடே
மருளறமயிலூதியென்ற
பொடியணிகுலாவவென்றி
மருவுகவுமாரமென்ற, மகமோடே
வருமுருகதாசனென்ற
கவிறுபலகோடிதொண்டர்
மகிழ்திருநெலவேலிவந்த, பெரியோனே. (ரு)

உ

இஃது

திருநெல்வேலி

வடக்கனவரதகானவிநாயகர்கோவிற்றெரு

மகாராஜராஜஸ்ரீ

## செந்திநாயகம்பிள்ளையவர்கள்

குமாரரும்,

இந்நூலாசிரியரதுமாணாக்கர்களிலொருவருமாகிய

## சித்திரபுத்திரபிள்ளையவர்கள்

இயற்றியது

கந்தவேள்புயபத்திரசந்தக் கவிமிகப்புனைந்தோன்றன்
சீ, ரிந்தவாறுமென்றிபாருமெளிதினிறைவெளிதலவேண
டி, யந்தமெய்யசரிதந்தன்னை யருந்தமிழ்க்கவியிற்சொ
ன்னான், சந்தனப்பொழில்சூழ்நெல்லைத்தண்டபாணிய
னென்போனே. (க)

அருணையம்பதிவந்துதித்தமாதவன்றனருள்விளையா
டல்களனைத்தும், பொருணயம்பெறுசீர்த்தமிழ்க்கவிய
தனற்புகன்றெமதுளத்தினிற்பொருத்தி, யிருணையப்பு
ரிந்தமுருகதாசனைவேலேந்தியகுருபரற் கினிய, கரு
ணையங்கடலையநுதினந்துதித்துநற்கரங்குவித்திருப்பதெ
ன்கடனே. (உ)

நீடியசீர்த்திருவருணைச்சிகரிவாயி னிலைக்குவடபுறத் தினிற்குகிமலவேளைப், பாடியபைங்கிளிப்புலவன்சரித ந்தன்னைப்பலவாறிவ்வுலகத்தார்பகராவண்ண, நாடியரு ண்மலிமுருகதாசனென்னு நலங்குலவுதிருப்புகழோன வின்றுனன்பாற், றேடியமெய்க்கவுமாரர்பலருங்கேட்டு சசிரமசைத்துக்களிகூர்ந்துசிறப்புற்றுரோ. (௩)

## குறிப்பு.

தனனதனதானந்தனதனத்தானதய்யானு

கயிலையிறையாளுங்கழைவனத்தூரினல்லோர்சூழ் களிமருவுசீலன்றமிழ்வனப்பாரும்வல்வாயான், வெயி லவனைநேரும்புகழுடைத்தூயன்மெய்கோடா விறன்மு ருகதாசன்றிருவருட்சீரையெள்ளாதா, னெயிலினிடை வாழுந்தகுவரைப்போரில்வெல்சீரா லிமையவர்கள்பே றும்பெருமைபெற்றியாதுமொவ்வாதா, மயிலணியுமா ர்பன்கழல்விருப்பாளர்சொல்லாலே யருணகிரிநாதன்க தையினைப்பாடல்செய்தானே. (௪)

---

உ

திருநெல்வேலி

## ஒளிமுத்துத்தொண்டமான்

குமாரரும்,

இந்நூலாசிரியரது மாணாக்கர்களிலொருவருமாகிய

## அருணாசலத்தொண்டமான்

இயற்றியது

ஆண்டிமையோர்க்கருள்புரிந்தகுமரகுருபரக்கடவு
ட்கடிணைத்தன்மை, பூண்டினியதமிழ்ச்சந்தக்கவிபொ
ழியுமருணகிரிப் புலவன்காதை, வேண்டியவாறுலகு
ணாக்கும்பொய்மைதவிர்ந்திடமெய்மை விளங்கவெங்க
ள், பாண்டிநன்னாட்டிருநெல்லைப் பதிமுருகதாசனன்
பிற்பகர்ந்திட்டானே. (௧)

கந்தனேபரமென்றுணர்ந்ததாலவன்பொற்கழல்களை
யநுதினந்துதித்த, செந்தமிழ்ச்சந்தப்பைங்கிளிப்புலவ
ன்றிருச்சரித்திரந்தனைத்தெரித்தான், மந்தமாருதம்வந்
துலவியநெல்லைமாநகரிடத்தபிற்படையைச், சந்ததம்
போற்றியருள்பெறுமுருகதாசனா மாசிலாதவனே. (௨)

பொங்கரவ மணிந்தபிரா னருணைநகர்ச்சிகரிப்புக
ழோங்கத்தமிழ்க்கவிதை பொழிந்தவன்றன கதையை,
யைங்கரத்தோன்றனக்கிளைய குமரகுருபரவேளநுகிர
கப்படியுரைத்தெனமனக்கவலைதவிர்த்தான, பங்கமிலசீ
ரருளவடிவுறழுகணிந்தநீறும்பவளநிறத்தானையொன
றும்பழகுறுகணடிகைகூப்பு, மெங்கணுமெச்சியதிறலவா
ய்ந்திலங்குதண்டபாணியெனனுமொரு திருப்பெயரு
மிசைந்துடையோன்றனே. (௧)

## குழிப்பு.

தன்ன தனதன தயபத் தனதன தத்தன தந்தனை..

படியிலுயர்திருநெல்லைப்பதிவருபத்தர்திணும்பகாசிர்
பழகுமனதினறுப்பவைத்தருதவ முற்றுமுணர்ந்தருள
வோன, மிடியிலிடைபடுமல்லற பிணியையறுத்தெறி
யுந்திறலசோ விரதனதிநயமலகிக் குலவுதிருப்புகழும
பொழிவோன், முடிவிலசமரசவெள்ளக்கருணைவனப்ப
விாபண்பினரா முனிவரதிபதிவைகத்தகு பொதியைத
தமிழின்கவியா, அடிமைகொளுமுருகையற் குரிமைமி
கப்பெறுபைங்கிளியா மருணகிரிமுனிமெய்மைசசரித
முரைக்கவழிநதனமே. (௨)

சாத்துகவிகள், முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

# அருணகிரிநாதசுவாமிகள் புராணம்.

## பூர்வபுண்ணியச்சருக்கம்.

தமிழ்மணங்கமழ்தென்றலுஞ்சந்தனக்காவு *
அமிழ்தைநேர்சுவைப்பொருநையாகியநதியாந் *
மிமிழ்வருகவெள்ளருவியின்கூட்டமுமேமச *
சிமிழ்குலாவியமுலையரமகளிர்தருசெறிவும். (க)

சித்தர்தங்கணங்குகைதொறுநிலவியசிறப்புந் *
சத்தமேகமுமடைகிடந்தறல்பொழிதகையுந் *
சுத்தநான்மறைநெறிகொள்வாரறுவர்சொற்றுதியும் *
புத்தராதியர்நினைதொறுநடுக்குறும்புகழும். (உ)

வெருவிவானரக்குலத்துடல்விதிர்ப்புறப்பிளிறுங் *
கருவியானையின்மதமலர்கனியிழுல்கலுழ்தேன் *
அருவியோடிடுமோடையுமாகியவளத்தாற் *
பொருவிலாநலங்கொடுதிகழ்சுந்தரப்பொதியை. (௩)

MAHAMAHOPADHYAYA
Dr U V SWAMINATHA IYER LIBRAR

கல்லின்மேன்மலர்கமலநாண்மலர்த்திரள்கண்ணாய *
வல்லிமான்மயிலணங்கினமாகிவாலருவி *
மல்லிலங்கியவச்சிரப்படையதாய்வயங்கப் *
புல்லியிந்திரன்றனைப்பொலியுமப்பொருப்பு. (௪)

வாணிநீங்கருமுகத்திறைப்பல்லுயிர்வருக்கம் *
பேணியிசையாற்பொன்னெனப்பிறங்கொளிதன்னான் *
மாணிலாவியபாதவர்குழுவினான்மலரோ *
காணியாமெனவதிதரும்விதியினைக்கடுக்கும். (௫)

ஓங்கிநீடலின்முகில்பொதிந்திரண்டபோற்றுருவிற் *
றீங்கிலாதவெண்வகைத்திருமருவலிற்றிகிரி *
தாங்கிநிற்றலிற்சங்கமுற்றவிர்தலிற்சகத்தோர் *
ரோங்கிடாதளித்திடுதலினாரணனேய்க்கும். (௬)

நீரினொடுவெண்மதியமுந்தலைமிசைநிலவி *
வேரிநாண்மலர்க்கடம்பனாவ்வேடரான்மிகிபட *
டேரிலங்கியகொன்றையும்பணிகளுமேய்ந்து *
நாரிபாகனேயாமெனத்திகழ்ந்ததந்நாகம். (௭)

கடலினீரளப்பவொணாவம்மலைக்கவினைப் *
புடவிநாவலர்பலர்சொலிப்போந்தனரன்றி *
யிடமிதல்லநாமென்றமட்டியம்பவுமதனாற் *
றொடருமாக்கதையதன்வகைசொல்லுதுமன்றே. (௮)

அந்தமால்வனாதனக்குமாதவத்தினரார்க்குஞ்
செந்தமிழ்ப்பெருங்கடற்குமன்னெனத்திகழ்முனிவன்
வந்தநாளிலிர்ரும்பிரவன்னிமாநதியைப்
பைந்தண்வாரியிற்கொடுவிடுத்தடைந்தவப்பாலே. (௬)

நீடுநாணிருவிசறபமாயிருந்தனனெறியிற்
கூடுமாறுருன்புரிந்தவேற்குருபரனருளே
வீடுறுதுகண்விழித்திடப்பிரித்ததுவிழித்து
நாடுவாழ்வதுகாணுறசசிந்தையினயர்ந்தான். (௭)

தெய்வநான்முகன்றலையினிற்பலிகொடுசிறந்த
சைவநாயகனேயெனத்தகுமுருவிருக்க
வுய்வதென்றெனுந்தளர்வுறுமாதவருருவ
மெய்வதாகவென்னிமித்தமோதிருவுளமிசைந்தான்.

என்னஞாரருட்பேறுறுமுன்னமுற்றேய்ந்தோர்
மன்னர்போலுருக்காட்டியுநடித்தலின்மாறு
யன்னவாழ்வடைந்தவர்க்கரசாகியுமமைவா
னின்னல்கூர்பவனெனத்திகழ்கோலமொன்றெடுப்பான்.

தளர்ந்தகோவணங்கிண்முழுநீறுகைத்தடிகூன்
வளர்ந்தகாதுகண்டிகைநரைதிரைமுதல்வயங்க
வுளந்தயங்குநர்போற்சிலமொழியுரைத்திருமிக்
[illegible]ளர்ந்தபைம்பொன்மேற்செம்பினைப்பூசியுங்கிறிபோல்

வேடமவ்வணஞ்சமைந்தபின்னம்மலைவிடுத்து *
நாடடைந்துபன்னகர்தொறும்புகுந்துநற்றமிழ்சசீர் *
நீடலாதியவளமெலாங்கண்டனனிமலத் *
தாடலைக்கொடுசரண்புகத்தக்கவர்க்காணன். (கச)

வந்துசிற்சிலர்நின்குலமியாதெனின்மறைக்கோன் *
முந்துபாலனியானென்றனன்மரபினைமுதிரா *
விந்துசேகரன்குருபரன்சீடனென்றிசைத்தா *
னுந்துமாயுள்பல்லுகமுடிவுணர்வனென்றுரைத்தான். *

என்னவூணெனிற்கடலினும்பெரிதகடென்று *
னின்னவாறுகண்டனனெனசசிலபகரென்றுற் *
பொன்னமாநதிவரன்முதலாவனபுகன்றன் *
கன்னலாலம்பொகுறழ்தமிழ்க்கடல்கடந்தோன். (கரு)

மந்திரந்தெரிவேனிரதாதிகள்வாங்கித் *
தந்திடிற்கருந்தனம்விளேப்பேனெழிற்றரளப் *
பந்தியன்னபற்பாவையர்மயல்கொளப்பண்ணு *
மெந்திரந்தருவேனெனவிசைத்திலனந்தோ. (கசா)

பித்தனேயெனச்சிலர்சிலர்பேசினரழைத்தா *
ரத்தகைப்பெயர்க்கருகனியானல்லனென்றறைந்து *
முத்தர்சேகரனிவனெனத்தேர்ந்திலர்முன்போற் *
கொத்தருமலாப்பொழின்மலயாசலக்குகையை. (கஅ)

நண்ணியோர்குறுநகையொடுமீண்டனன்வழியில் *
வெண்ணிறத்ததாய்வியனெழிலுடையதாய்மிகுத்த *
புண்ணியத்ததாய்ப்புநிதியின்மிக்கதாய்ப்புவியிற் *
றண்ணிலாவெனத்திகழ்ந்ததோர்நாய்த்தனிக்குருளை. *

கண்டுமாமுனிகருதுமுன்கடுக்கெனவணுகிப் *
பண்டுசெய்தவப்பயன்கொடுபணிந்துவாலசைத்துக் *
கொண்டுமோந்தருள்பொழிமுகநோக்கியேகூவித் *
தொண்டுநாடியசீடரிற்றொடர்ந்ததுமன்னோ. (௨௰)

போனபோததன்புதுநடைபொறுத்திடாதிரங்கி *
ஞானவேள்கழற்றுணைமணம்விந்தமாநாகம் *
வானமேலெழலடக்கியவ்விமுதல்வாய்ந்த *
தானதன்கரமலர்களாலெடுத்தனனணைத்தான். (௨௧)

அந்தவேளையிலமரர்கின்னராமுதலானோர் *
கந்தமாமலர்பொழிந்தனர்கயிலையானெறும்பைத் *
தந்தமாவினைசிலந்தியைத்தறுகண்வாளரவை *
முந்தவாண்டமைபோலுமீதெனமிகமொழிந்தார். (௨௨)

தன்னுருக்கொடுசந்தனமால்வரைக்குவட்டின் *
முன்னுறைந்தவாறெழுந்தருளினன்முனிக்கோமான் *
றின்னுமக்குருளையும்வளர்ந்ததுபெருந்துணிவாற் *
பன்னுமாதவர்பற்பலர்புகழ்ந்தனர்பணிந்தார். (௨௩)

உய் அருணகிரிநாதசுவாமிகள்புராணம்

முத்தமிட்டனாமுதுகிளைத்தடவினரன்றிப் *
பத்தமுற்றவாபலவிதம்பயின்றனர்பண்டு *
மைந்தகைத்திருமாலணிநெற்றியிற்சூலக் *
குத்தமைத்தவன்களித்தருள்வரமிகக்கொண்டார் (உச)

ஆனநாளின்மற்றோர்பிரமாண்டமுற்றரிய *
ஞானமின்றியெண்சித்தியும்பெற்றொருநாத *
னியானடைந்தபேறெவர்க்குளதெனத்திருமாப்போன் *
வானமேவழியெனக்கொடிப்புவனியில்வந்தான். உரு)

இங்குவந்தவனெண்ணிலாமுனிவரரொன்றுந் *
தங்குமால்வரைபொதிகையேயெனத்தெளிதகைபா *
லங்குபோயளப்பரும்புகழக்குறுமுனியறிப்ப *
பொங்குமாணவவழுக்குறுமொழிசிலபுகன்றான். உசு)

கேட்டுமாதவன்மறுமொழிகிளத்திலன்றனது *
மாட்டுவைகியசுணங்கன்மேல்வலக்கைவெண்ணீறு *
போட்டுநோக்கினனுடனதுசெந்தமிழ்ப்புதிய *
பாட்டுமொழிகைபகர்ந்திடத்துவக்கியதன்றே. (உஎ)

அன்னவற்புதங்காண்டலுமவனடுநடுங்கித் *
தன்னகங்குலைந்திறைஞ்சினன்பணிந்தனன்றவர்கோன் *
பொன்னடித்துணைசுமப்பதில்விழைவொடுபுலர்ந்தா *
னின்னதன்மைகண்டிருங்கடல்குடித்தவாயியம்பும். *

ஆணவப்பிணிகொடிதினுட்கொடியதேயறிலோன் *
ஞுணயந்தவர்க்கலலதபெரும்பகைதவிரா *
வேணபேறடைந்தாலுமியானுயாவெனலவெண்மை *
நாணமோடுதறபழித்தன்மெய்யுணர்வெனநவின்று. *

தொணடர்காண்மலர்ததொழுநலம்பெறும்படிசொலலி
ப், புணடரீகனைபபுடைத்தவன்றந்தமெய்ப்பொருளொ
ன், ஒணடதைக்கரும்பருவமீதன்றெனவுரைக்க, வண
டர்வேண்டுமெயப்பணிசெயுமவர்புடையடைந்தான். *

கொள்ளைநாடகழித்தகத்தியப் பெயர்முனிக்கோன்றன் ,
பிள்ளைபோலவளர்த்தருளியபேறுறப்பெற்ற *
வெள்ளைநீரையிநினவிருப்பமியாதுரையெனவினவ *
வெள்ளைநேர்துறைதானுமெற்கிலையெனுநதந்தோ. (௩௧)

கற்பகத்தருநிழலரசுரிமையிற்கடையே *
னிறபதற்கவாவடைந்தனனென்றதுநிகழ்த்து *
மற்பவாசகநகேட்டலுநகைத்தனனநாள *
சறபமாகவோரிந்திரனறனைசசெயுநதகையோன். (௩௨)

இழிகுலத்தினர்க்கெத்தனைமேன்மையெயதிடினு *
மழிவின்மெய்ப்புகழ்விரும்பிடாவொன்றுளக்கமைத்து *
விழிகளாலுடன்பெறும்படிவிடுத்தனன்வினைபோ *
யொழியும்வீடுமோர்நொடியினிற்றரத்தகுமுரவோன். *

புதியவிந்திரன்பொன்னகர்புகுதலும்பழையோன் *
மதிகுலாமுகசசிமையைவிட்டழச்சிவன்மலர்த்தாட் *
டுதிகொள்பூதர்வந்தடுத்தனர்பிடித்தனர்தொலையா *
விதியைவெல்பவுரியாவரொன்றேகியுமெலிந்தான். (௧௪)

ஒற்றையிந்திரன்கணகமால்வரைக்குகையூடுற் *
றெற்றைநாடீணையெய்துமென்றிருந்தவனிகலா *
மற்றையோன்வரக்கண்டுளமகிழ்ந்தனன்வந்தோ *
னறறைவாழ்வடைந்தவன்வரற்குறித்துநொந்தனனால்.

அம்மலைக்குகையடைத்தடற்கணங்கள்போயினபின் *
மும்மலப்பிணக்கொழிந்தமாமுனிவனுன்முகிலூர் *
செம்மலானவன்செழுமலர்க்கற்பகநிழற்கீழ் *
விம்மலார்முலையணங்கரான்மகிழ்ந்தனன்வெகுநாள். *

சூரனாதியதகுவராற்பெருந்துயர்துய்த்தான் *
வீரவேலன்மாலனையராற்பகையறவென்று *
னீரமில்லவரிடுமெகத்தவிகளுமேற்று *
ஞரதன்சொலாற்பரிபலதிருடவுநயந்தான். (௧௭)

இந்தவாறுபல்விதம்புரிந்திலங்குநாளிகத்திற் *
கந்தநாண்மலர்க்கமலமேனாதியபடிகனவில் *
வெந்தவாம்பரிநூறயின்றிடுமொருவேந்தன் *
றந்தவெண்களிறுதியாந்தகையெலாங்கவர்ந்தான் (௧௮)

முன்னுளாருடனிவனுமுற்றிடைந்தனன்முறையிற் *
பின்னுமோரிரண்டிந்திரர்பெயர்ந்தனர்பிறங்கன் *
மன்னுமைவருங்கவுரவக்குலத்திடைவையம் *
பன்னுபாண்டவராயினரன்னவர்பகுப்பில். (௩௯)

வேறு.

மத்தியிந்திரனுத்தென்றல வனைமுனியருளால்வந்தோ
னத்திறத்தடற்காண்டீபனுகினனவனேமாயன் *
சத்தியினரனென்றோங்குந்தனிக்கலைபுணர்ந்தநீரரன் *
மெய்த்திறல்கிராதியாதிவியனெலாமிகுத்ததம்மா. (௪௰)

ஈசனைத்தடங்கைவில்லாலிசைபடசசடையின்மோதித் *
தேசவிாகணைபெற்றுய்ந்தான்றிருமலிகனகாட்டு *
வாசவன்பகைவர்செற்றான்மணிமுகிலனையமேனிக் *
கேசவன்சூதனுகிக்கீழிருந்திடவுங்கண்டான். (௪௧)

இவ்விதத்தவன்செயாடலியானவயுமெளிதிற்றேர்ந்து *
செவ்விதினுணக்கவல்லான்சிவனெனத்திசயுபராசன் *
மைவிழிப்பேதைதன்பால்வழங்கியமகவேயலலா[றே.]
லௌவியநெஞ்சத்தென்போன்றவர்சொலிலடங்காதன்

றெவண்ணகைபடவார்தாமேவிறப்பிடுவியன்றேட்பா
ர்த்தன். திண்ணனென்றுருவங்கொண்டுசிறந்துயர்திரு
க்காளத்தி, யண்ணலுக்கன்பனுகியடிபணிந்தாறுநாளிற்

கண்ணைப்பறித்துவெள்ளிக் கயிலைமாமலையிற்சேர்ந்தான். (௪௫)

கீரனென்றவனேதோன்றிக்கிளர்தமிழ்ப்பலகையேறி *
யீரமின்மனத்தார்போலுமீசனோடெதிர்வாதிட்டுக் *
சாரமர்பொறியைக்கோமான்கழறிலக்கணநூல்கேட்டுக்
கோரவல்லரக்கிதன்னாற்குகையினுட்குறுகிநொந்து *

பைந்தமிழ்ப்பனுவலாற்றுப் படையெனவொன்றுபாடிக், கந்தனுக்கணிந்துசெம்பொற் கதிரயிற்படையான்மீண்டு, மந்தவன்பகடடுக்கூற்றின்வசமுறுவரம்பெற்றேகிச், சிந்தனைக்கினியவாழ்விற்சிறிதுநாளிருந்தபின்னர்.

முதிர்தமிழ்க்கவிதைப்பொய்யாமொழியெனவந்துதோன்றி, யதிரொலிக்கடகச்செங்கை யணங்கனோரரிவைதன்னை, விதிமுறைமணந்துரோமம் வெளிறுமட்டினபத்தோடு, மதியினைச்சுடுவதாய வறுமையுந்துய்த்தானமன்னோ. (௪௬)

எவ்வகைத்துயருற்றாலுமீசனையன்றிமற்றோர், தெய்வமுந்துதியேனென்னுந்திடத்தினிற்சிறந்தான்செவ்வேள், கைவயின்வேலுந்தோன்றக் கனவினிற்பலகாலவந்து. செவ்வனப்புறுபாட்டென்மேற்செப்பெனவிரக்கக் கண்டான். (௪௭

கோழியும்பாடிக்குநசுங்கூறிடேனெனவேசொன்னான்
பாழிதோயமனத்துக்கீரன்பட்டபாடறிகியென்ன *
வாழியங்கருணைச்சேந்தனறைதலைமதியானானா *
னாழிகேழவரகுங்கம்புநாட்டினிலிரக்கநானான். (சஅ)

வாணனென்றொருவன்றன்மேலவளங்கெழுகோவைபா
டிக்,காணமுநதுகிலும்பெறறுக்கைவிரிதிரப்போர்கக
ந்திட், டுணளவிரந்தகம்போயிரியவளபசியைநாடி, யா
ணமிக்குநகிப்பாலையதனிடைநடக்கும்வேலை (சகூ)

கரியமாமேகம்போன்று கையினிறறடிவாள் வேல்கொ
ண், டெரியெழசினநதகண்ணாடெயினனொத்துருவ
ங்காட்டிக், கிரியெலாமுடையகோமான் கிட்டியானொ
வுங்கேட்டா, னரியவாயுலரமெய்வேர்த்தச்சமிகருளாக்
கலுற்று. (ரு௰)

புலவனென்றிசைத்தான்கேட்டுப்புன்னகைபுரிந்தவ்வே
டன், மலயமாமுனிவற்கன்றிமலரவன்றனக்குமின்றிக்,
குலவுபேர்தரித்துக்கொண்டாய்கொலெலனக்குழப்பந்
தீர்ந்து, நலனுணாந்துளளான்கொலலா னம்பொருள்க
வராளென்ன. (ருக)

உன்னினன்மறுத்தோர்மாற்ற முரைத்திலானதுகண்ட
ன்றேன், கன்னிவண்டமிழிற்பாடல் கழறுநர்சிலரும
ப்பேர், சென்னிமேற்கொள்வர்பாடத்தெரியுமோவென்

றுங்கேட்டான், றன்னிறைமகனென்றேரான்றலையசை
த்தாமாமென்ருன். (௫உ)

ஒப்பலுமென்பேர்முட்டை யுனதுசொற்சுவைச்சீர்தோ
ன்ற, விப்படிபாலேப்பண்போடிசைத்தொருகவிசொல்
லென்று, னப்படிப்பகரக்கேட்டுமநுதினங்குளுசியென்
னச்,செப்பவனதனின்முட்டைசீறிதெனும்விதநதேர்ந்
திலலான். (௫௩)

பொன்னினைக்கடுக்குங்கள்ளிபொறிபறந்திடும்வெங்கா
னி, லென்னிளம்பேதைசென்ருளிகலபுகழிசைவேன்
முட்டைக், கன்னியப்பகைவர்போவாரதனிடங்கைக்கு
ம்வேன்முட், டுன்னிடுமெனவோர்வெண்பாச்சொற்றன
ன்சுவையின்மிககோன். (௫௪)

கள்ளியிற்பிடித்துவேவுங்கனல்படுகானில்வேல, முள்
ளிருந்திடுமென்றேதன்முறைப்பிழையன்றேவென்ன;
வெள்ளிலேவேற்கைவேடன் விளம்பினானுறசெய்தப்
பாற், றெள்ளிமைப்புலவாநின்பேர்செப்பெனச்சிரித்து
க்கேட்டான். (௫௫)

ஐயுறவில்லான்றன்பே ரறைதலும் வெம்மைக்கஞ்சிப்,
பெய்யுமாமுகில்பெய்யாதுபெயர்தழற்கானத்தாடு, கை
யுலாம்வளேயாள்சென்ருள்கவிப்பொய்யாமொழியின்றெ
வ்வர், செய்யுமாறென்றோர்செய்யுட்செப்பினன்றிகைக்
கக்கண்டான். (௫௬)

மன்னுமாமுடிகளாறும்விறற்பெரும்புயமூந்நான்கு, ம
ன்னுசீர்பிறவுந்தோன்றமடநலாரிருவர்பாகந், துன்னுற
நடிக்குமஞ்ஞைத்தோகைபினீழலின்கட், பன்னும்வா
னவர்கள்சூழப்பளிச்செனச்சேவைசிந்தான். (௫எ)

காண்டலுந்துதித்தான்வீழ்ந்தான் கண்ணினீர்கலுழ்ந்
தான்சோர்ந்தா, னண்டரின்புகழகூறும லவத்தினேட்க
ழித்தேனென்றான், வேண்டல்பெற்றுயர்ந்தான்செவ்வே
ள்விண்ணிடைமறைந்தபின்னர், பூண்டவிர்ந்தழகேபூ
ணுமபொற்கொடியுறும்வீட்டுற்றான். (௫அ)

சிறிதுநாட்கழித்தப்பொய்யா மொழியடற்செழியற்கா
ண்பான், செறிபொழின்மதுரைக்கேகிச சிவபிரான்சே
வைக்காக, வெறிகமழ்வேப்பந்தாரான்மேவுமவ்வேலைக
ண்டா, னறிதியானின்றெனென்ன வறைந்தனனடுத்து
ஞ்சென்றான். (௫௯)

அஞ்சுறுதடுக்கக்கண்டவ்வனாயனந்நாளிலுள்ள, விஞ்
சுபாவலர்போலிந்நாள் விளங்குநருளரோ வென்றான்
செஞ்சுவைக்கழகத்துள்ளார் திருவுருச்சிலைகளியாவுங்
கொஞ்சுசொற்கவிகேட்டோப்புக் கொடுதலையசைக்கச்
செய்தான். (௬௰)

அன்னசீரகண்டும்வேந்தனையமுற்றிடலகண்டப்பான் *
மன்னரோபிழிவுற்றார்கள்வளர்கவிப்புலவர்தாழா,ரொன்ன
வோர்கவிதைபாடியியற்றமிழப்பலகையொப்பிப்,பொன்
னரவிந்தப்பொய்கைப் புனன்மிசைமிதக்கச்செய்தான்.

வேந்தவன்மனைவியோடு மெய்த்துணையவர் தம்மோடு,
மேந்தணிசிவிகையேறியெழினகர்வலம்வந்தேகி, நீங
தருந்துயர்போய்வாழ்ந்துநெடுங்கதிர்வடிவேற்செங்கை
ச,சேந்தனூர்தனிற்சாமீபத்திருப்பதமடைந்தானன்றே.

அறுவகைப்பிறவிசொற்றேமவற்றின்முற்பிறவியாதோ,
குறுமுனிவளர்த்தநாயின்குலவுசீரசரிதமொன்று, மி
றுதியிற்பகரு,மொன்றுமிகத்தினன்கிலங்காவாற்றாற், .சி
றுகளும்விரிதருனுந்திர்தரச்செப்பினேமால். (௩௧)

சுருக்கிடில்விளங்கிடாது துணிவொடு சொல்லுமட்டும்,
பெருக்கிடிற்பனுவல்கூடும் பெயர்னுககிசைவுறுதாங்,
கிருக்கவுமிடையிற்காதையீரிரண்டடக்கிசசொற்றேனு
செருக்குறுபுலவர்பலலோர்தெளிவுறச்செப்பலாலே. *

அருணையின்சிகரிக்கோயிலதனிடத்தயில்கொண்டோங
கு,முருகவேளருளாற்கிள்ளை முகமுனியமூக்காறெய்து
ந்,திருவுருப்பெற்றோன் முன்னைச்சீர்சிலதெரித்தேமன்
றே,ஞெருசிறுமதலையாகியுதித்தவாறுரைக்கலுற்றாம்.

பூர்வபுண்ணியச்சருக்க முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

## திருவவதாரச்சருக்கம்.

அண்டமுமொருலோகமுந்திவுநன்கறைந்து *
கண்டமொன்றுபினகழறியோதேயமுநாடும் *
விண்டபினனருணசலபபுகழ்சொலவிருமபேன் *
றுணடாசூழதனபெருமையைமுதற்சிலசொலலி (க)

அன்னதன்றொடர்பாமெனவவற்றையுஞ்சிறிது *
சொன்னபின்னடித்துவக்கமாங்கதைவகைசொல்வே *
னென்னகாரணமெனிலுலகியற்றினேன்புரப்போன் *
புன்னகங்கெடுத்தோங்கியபொருப்பெனுமதனல். (உ)

அம்மலைதிருவுருப்பலவண்டமுமணுவாச் *
செம்மலாமெனக்கருதியுநம்பிடுஞ்சிலர்க்கே *
வெம்மலப்பிணக்கறும்பலவித்தையும்விளங்குங் *
கைம்மலைக்கிளையவன்கழற்பெருமையுங்காணும். (ங)

மேருவுங்கயிலையுங்குன்றரப்பெறும்விதத்தை *
யூருளாருணர்ந்துரைத்திடும்பெருநலமுன்னி *
யாருறாஞ்சடைப்புனிதர்தாமலையுருவாயுஞ் *
சீருலாமவன்பதச்சுவடணித்தலைசேர்க்கும். (ச)

பருமைசான்முலைப்பார்ப்பதிபரிந்தருளமுத *
முருகனுண்டவன்முகுளவாயூறலிற்கலந்து *
கருணையீசாதாமுடித்ததோன்மிசைவிழல்கடுத்தாங் *
கருணவெற்பினிலப்பெயர்வாவியொன்றமையும் (௫)

வன்னமோகினிபுணர்ந்தநாளவள்பதமழுத்தோட் *
டுன்னவீசர்தனுசடைப்புனற்றுளிபலதோய்ந்து *
சின்னவாறெனசசொரிதரவவர்மடிசெறித *
லென்னவோர்தடமப்பெயருடனதிலிலங்கும். (௬)

சிறந்தகாழியம்பதியினன்வாக்குமன்றேனு *
கறந்தபான்மொழிப்பரவைகோன்வாதவூரக்கடவு *
ணிறந்தழைத்தசொற்புலவர்பற்பலர்மிகங்கழ்த்து *
பிறந்தமால்வளமாயிரம்புனையுமப்பிறங்கல். (௭)

நல்லவீகையிற்காமியல்பழியினுஞான *
வல்லபத்தினரொவ்விதவருத்தமுற்றேனு *
மெல்லவோர்சிறிதீதலொத்தழற்கிரிவிரித்துச் *
சொல்லரும்புகழ்ச்சோணமாநதியையுஞ்சொரியும். *

ஞானபண்டிதப்பெயர்மகவம்மலைநல்கி *
யானபாலனுலகத்தியமுனிவனைத்திருத்தி *
யூனமின்றியதமிழறிப்பித்ததன்றேயம் *
வானளாவியநாவலத்தீவில்வைத்ததரோ. (௮)

குமரிகண்டமேமூதற்பகரொன்பதுங்கூட்டி *
யமரர்கோன்றிசையாதியாமெட்டுடனுகநில் *
விமலமாமருணுசலமுருமவெள்ளிவிடையின் *
கமலநாண்மலாப்பதத்திணுக்கோரடிகாணும். (௰)

ஈசனுமருணுசலநதியென்றிடும்பேர்த் *
தேசவிர்ந்தகுன்றுதவுபாலாறெழிற்செய்யா *
ருசகன்றதண்கெடிலமாதியநதியனந்தம் *
வாசமார்ந்திருத்தொண்டைநன்னுட்டிடைமன்னும். (௰௧)

ஐந்துபூதமுமாகியதலங்களினடுவா *
யிந்துசேகரனேமலையெனவிலங்கிடலாற் *
ஹைந்துமுமயினன்பரவுமப்பருப்பதசசார *
னந்துருநடுநாடெனப்படற்பலர்நவிலவார். (௰௨)

எண்ணுவாரவினையிரண்டுமற்றிணையிலவீடெய்தப்
பண்ணுமம்மலைப்பரிசினைப்பாம்பரசுரைக்க *
நண்ணுமாயினுநாணுமென்றூற்சிறுநாயேன் *
புண்ணுலாமனங்கொடுபுகழ்கருதிடப்போமோ. (௰௩)

சிவத்திறற்சமைந்துளவருணுசலசிறப்பென் *
றவத்தனைப்பலமரங்களாதியபொருளறையேன் *
றுவக்குகாதையுமவ்வரைப்பெயர்புனைதொண்டன் *
றவத்தின்மேன்மையென்றுணிச்சாற்றுவதென்னே. *

வேடர்சேரியின்சாரலும்பற்பலவிருகத் *
தாடலும்புனலருவியுந்தோயும்வெற்பணந்தத் *
தூடவிர்ந்திடுமருண்மால்வரையிணையுரக
பூடணத்தரன்றனெனககருதிடாரபொலலார். (கரு)

அருணமால்வரைக்கன்னியமல்லதோர்நகரந *
தருணமங்கையராடிடுங்கோயிலுந்தமிழ்ச்சொற *
பொருணலந்தருங்கோபுரத்துயர்சரியும்புகலுல *
லருணமாநதாகல்வாழமறுகினங்களும்வயங்கும். கசு

வேறு.

நாயவர்விருமபுபலதுங்கபும்விளைக்குந் *
தீயவாகுலத்தொடுதிடுக்தறவெருட்டு
மாயனயனன்றுருவமாறிடவளர்ந்த *
சேயமலையொன்றுதிகழ்தென்னருணையூரே. (கஎ)

ஆனியிலபெரும்புகழனந்தமுறவாகும் *
வேனின்மதனைசகடுமவிழாவணிமிகுக்குஞ் *
சேனிலவுவாவிடாலசேர்தரவிளங்கு *
நானிலம்வியநதுதொழுநல்லருணையூரே. (கஅ)

மாதவர்குழாமிகவும்வந்துகளிகூரும் *
வேதமுணர்மேலவர்விதித்தொழினடக்குஞ் *
சீதளமலர்க்கமலைசிநதையொடுவைகுங *
கோதறுசிவன்புகழ்குலாவருணையூரே. (ககூ)

நெற்பயிர்கரும்புகழைநீள்கமுகுவாழை *
பற்பலகுலத்தினர்பரிந்துறையும்வீதி *
முற்படுபொருட்டொகுதிமுன்னியவைதம்மாற் *
கற்பனைமொழிந்தனாகவிப்புலவர்பல்லோர். (௨௰)

அம்முறைவிரித்திடலடுத்ததலவென்றே *
யிம்முறைசுருக்கினமியற்றுனிமுழங்குஞ் *
செம்முறையுணர்ந்திலர்திருத்தியடையார்தா *
மெம்முறைவிளம்பினுமெமக்கதுசிறப்பே. (௨௧)

அந்நகர்வளம்பொருமளப்பரியதொண்டர் *
முந்நவைதவிர்ந்தமுதன்முத்திபெறவென்றே *
செந்நிலமிலங்குதிருவேடமொடுசெப்பு *
மெந்நகரிடத்தினுமிருந்துவரலுண்டே. (௨௨)

பொன்மலிதலந்திகழ்புகார்நகரில்வந்தோன் *
கன்மனமுருதுதவுகங்கைகுலமுற்றோன் *
தன்மகிழபொருட்கொடியர்வாணிபமுயன்றோ *
னன்மருதநாதரடிநாடொறுநினைப்போன். (௨௩)

வாசவன்முதற்பலர்மனத்தைவிலைகொள்ளு *
நீசனும்விலைப்படவிருந்தவம்விளைத்தோ *
னைசகல்வடக்கினளகாபுரிபுரந்து *
நேசனெனவன்னவனிகழ்த்தமுன்மகிழ்ந்தோன். (௨௪

மெய்த்துறவினோர்புடையின்மிக்கபுகழ்பெற்றோன் *
பொய்த்துகளொழிந்தகவிபோதவுநுவன்றோன் *
மைத்துணைவிழிச்சிகையின்மாசுதவிர்பாண *
னுய்த்துளதொருசிகொடொருங்கறவொழித்தோன். *

தாயுரிமையொன்றுதணவாதனைவைத்தோன் *
மாயுறுபிணக்கையெருவாயெனுருயாவா *
லேயுமுயிரோடெழவெழுப்பன்முதலாக *
வாயும்விளையாடல்ளவற்றவைபுரிந்தோன். (உசு)

தில்லைமருதூர்மதுரையாதியவைசேவித் *
தொல்லையினில்வீடுதவுமாருணையென்னு௩ *
சொல்லைநனியுள்ளிநகாதோறமுதிரந்துண் *
டல்லைநிகர்கண்டருறுமப்பதியடைந்தான். (உஎ)

வேறு.

வந்தமாதவன்றன்வளர்செவிச்சீரும் வலக்கையிலுறுந் திருவோடுஞ, சுந்தரவெண்ணீறணிந்த மெய்ப்பொலி வுந்தூயகோவணத்தொடுபிறவு, மந்தமாநகரத்தனைவ ருங்கண்டாரடுத்திறைஞ்சினர்சிலர்சிலர்தா,நிந்தனைபுரி ந்தார்சிறுவர்கல்லெறிந்தார்நிகழ்ந்தனவிப்பரிசனந்தம்.

தொய்யில்வேய்மென்றோட்கவுரிவாழிடத்தார் அலங்கு மவ்வூர்ப்பெருங்கோயிற், பொய்யின்மெய்ப்புகழதோய் பொருப்புடன்றெழுதான் புகழ்ந்தனன்சுற்றினன்புகழ

சால, கைப்பினிறுறும்பேயக் கரும்புடன்சுழுழ்ந்தான்க ளிப்புறுநலஞ்சிலகணைடான், மைப்பிலங்கியகட்சிறுமிய ர்படைசூழமதனனைமதித்திடாமனத்தான. (உ௯)

ஆயகாலையிலசிவபிரான்கோயிற்கடிமையேயாப்ப ணிபுரியுந், தூயவாணகையார்புடைவரககண்டோர்சுரி குழல்புரிதவபபயனுஞ், சேயவேளபொயயாமொழியி ன்மேலவைககுநதிருவுளக்கருணையுநதிரட்டொட், சிய மேபோலத்திகழும்வல்லாளன்சிகரியினதிடடருஞசே ர்ந்து. (௩௰)

வரமபிலாதெழுதுப்பிரமனுதரவான் மதனவேண்முதற் றெரும்மேனி, னிரம்பிமானமழுவு, நீலகண்டமும்வெண் ணிலவணிசடிலமும்பிறவும், பரமபியநெறிசிற்பயமிலா துருவிபபாய்நதிடசசெயதவிறபதைத்தான், றரம்பிரித் திடின்மேலெனத்திகழொருமான்றனையடிக்கடிமிகநினை த்தான். (௩௧)

ஆதிநாளமரர்ககிசலவர்மூவ ரசுருசத்தொருத்தியோடு திககு, வேதியன்மகனுஙகாசிபமுனிவன் மிகமனம்வரு ந்தலுஞ சகித்த, சோதவானவனன்னவர்கருறவாகித்து தித்தமிழுசொரிமுகிலனைய, ரீதியோன்பிறததற்கிவ்வ ணம்பொறுத்தநிலைமையோர்கொடிதலநிலத்தே. (௩௨)

எத்தனைவிதத்திற் றடுக்கினுங்கனன்மீ திழுகையைச்
சொரிந்தவாறுக, முத்தமென்றுலகிற்சிலர்பகர்பெயரா
ண்மோகமேமேலிடற்கொல்கி, யத்தனைககருதிக்கச்சி
லென்றொருபாட்டறைந்தனனதனிலுந்தவிரா, னித்த
திக்கிவ்வூர்வசிப்புநன்றலவென்றேகினன்வடதிசையிட
மே. (௩௩)

கசியேகம்பங்கண்டனனிறைவன் கழல்பணிந்தப்பெ
யர்மகுட, மெச்சிடற்கினியசுவைமொழிப்பெருஞ்சீர்
மேவியமாலையொன்றணிந்தா, னசிவனிரங்கிமயலொ
ழித்திலலானணிகொளாரூரிலோர்புலவ, னசியகொடி
பாற்றாதுமுன்சென்றே னவின்றிடாதிருந்தென்னைய
னே. (௩௪)

அஞ்செழுத்துரைத்துப் பரசிவனுருவத்தகஞ்செலுத்
திடுஞ்சமையத்து, மஞ்செனககறுத்தகூந்தலுந்தாளம்
ணிகைப்பவளவாய்வனப்பு, நஞ்செனவமுதமெனத்
திகழ்விழியுநவிலவனபிறவும்வந்திலங்க, வெஞ்செயன்
மதவேட்கிளைப்பவர்போன்றே மீண்டனனருணையைவி
ரும்பி. (௩௫)

சென்றனன்விரைந்துசேர்ந்தனன்றெருவிற்சிறுவர்தாம்
பற்பலர்சேர்ந்து, பின்றனைத்தொடரத்திரிந்தனனொ
நாள்பிரமைப்பெருக்கியபேதை, குன்றவிலலுங

யிராகோயிலைநாடிக்குலமயிலெனவரக்கண்டான், முன்றழுதுகாட்டிக்கொடுத்ததென்றடுத்தான்மொய்குழலவெருவிலண்மகிழ்ந்தான். (௩௬)

அன்னமிட்டடியார் தம்மொடுபழகுமகத்தினிற்பிறந்தவாறதனுற், சின்னமென்முலையாள்சிரித்தமாமுகமுந்சிந்தையுளன்புமேற்சிறக்க, வென்னகாரணமெம்மடிகளேயெனக்கேட்டிருகையுங்குவித்தனளிணைநீ, ருனதுமயலாங்கடலிடைதளர்வேறகொருகைதந்தருளெனப்பிடித்தான். (௩௭)

தொட்டபோதச்சமானமோடுதிக்கச் சுரிகுழற்றோகை[illegible]ணடடமாடியபின்னெனமிகும்வேர்வைநகுநகலைபணியொடுநனைக்கக், கட்டபுற்றிடுமுன்விடாமலைக்கோடிக்கருணையந்தாயொடுபகர்ந்தா, னிட்டமாமபடியேநடந்திலாயமகளே யெனவழைத்திடனு சொலென்றெழுந்தாள். (௩௮)

அம்மகள்கரந்தொட்ட வனுடற்பரிச மாகுமுன்குக்குமம்புணர்ந்து, மும்மலத்தொன்றாய்முடிந்தமெய்ப்பொருளகய்முளை கரும்பித்தாயசுக்கிலநீர்,செம்மவா விருந்தமனத்தினைக்கழுவுந்திறத்தொடுவெளிப்பட்டதனது, கைம்மலரதனிலேநதியாங்குதிர்ந்த கவினரசிலையின்மேல்வைத்தான். (௩௯)

ணைத்தலுமவளைத் தாய்கொடுவெந்தாண் மலரடிபணிந்
னெழுநதம், முத்தவாணனையும்பதந்தொழப்புரிந்தா
ண் முன்னியவாறருள்புரியச், சிததமூடிரங்க வேண்டு
மென்றிரந்தாளசிறந்தபேரறிவினைமதித்துக், கைத்தல
மதறைசுட்டியோர்வெண்பாக்கழறினன்களங்கமில்கரு
த்தோன். (௪௰

தோடவிழ்மலர்மெல்லளகமாயயிலே தொடர்ந்துனைவி
ரும்பினாபோ ஞா, நீடறிவதலைறிகி நீயென்னைநினைத்தி
டிலிடுப்பினிலுதைப்பேன், கூடநான்விரும்பிலுதையெ
னுப்பொருளுட்கொண்டனள் குறிப்பிறைலதைக்கண்,
டாடகபபணிதோய மகளுணக்கொடுததா ஏ ரழுந்தக
ருப்பமேயானுள். (௪௧)

கந்தலோகத்திலுறைபொய்யாமொழிப்பேர்க் கவியவள்
கருப்பைபுட்புகலுஞ, சுந்தரக்களபமுலைமினார்கலவிசசு
சுப்பெருங்கடலுநற்சுவைதோய், செந்தமிழ்க்கடலுஞ
செழிக்குமென்றருளாற்சேணகத்திந்திராதியருஞ், சந
தனைப்பொதியைமுனிவனுதியருந தனிததனிகருதினர்
காமே. (௪௨)

அருட்பெரும்பேற்றுக்குரியவன்கருப்பத்தமர்தலாலன்
னிவட்கழகுந், தெருட்சியுங்கணவிற்றேவர்கண் முனி

மேலாத்திசழ்நலமர்தியபிறவு, மருட்கொடேண்வெறுத்தன் முதலியவியலபும்வளாககனமாதமோர்பதது, முருடடு தோப்பரிதிமுடித்தநாளாயவொருசுபதினததிலவாதுதி ததான். (௪௩)

ஆறதாந்திஙகண்மூன்றதாங்கிழமை யரியநாள்பன்னிர ண்டாகு, மூறணுகரிதாமிலககனமொனபா னுமவனுதி த்தபோதென்கை, கோறலுண்டுவப்பார்குலமறககளோ துகுலவுமவேறகுருபரன்றனக்கு, நீறணிதகையாற்றவ முதிர்நதவாபோல் லவுமென்றனக்குநிசசயமே. (௪௪)

அன்னேபாலகஃனக்கணடுகண்களித்தாளவளிலெண்மட ...வுறமுண், முனனேநாணடநத விதிகினேத்துவ கைமுருகினன் பெரியமு புலினததா, ரென்னேயோவறி யேம்பெண்பிறநதிடலபோன றிவர்மகிழகூாவ தென்றி சைத்தார், பொனனேவேண்டிடுமவ்வினததிலிவ்விருவர் புகுநததுபோதஞாபிறைமே. (௪௫)

பத்திரகிரிக்குத்திருவருள்கிடைப்பான்பருங்கழுவெரி யெழுப்பாடி, முதகிவேடடிரப்போர்தமையிகழகொடி யோனமுதுகுடாசரிதரமொழிநது,கைத்தடுமொருபே ய்க்கரும்பினிப்பாஞசீாகமழகிருவொற்றியிலிலிங்க, சி த்திபெய்தினன்றன்றவத்திஞெலுருவாஞ சேயிதென்று ணர்நதுளாரசிலரோ. (௪௬)

மூவிருபொறியுங்குறியுமாதரவாமுருகனை முன்னிடுமெவ
ர்க்குந்,தாவின்மெய்ப்புலவோர்தமக்குமாருயிர்போற்ற
னியருணாசலத்தலத்தின, மேவியவருணகிரியவதாரம்
விளம்பினனினியவன்வளர்ந்து, பாவிமாயையினாலுல
கினினிகழ்ந்தபலவினோதங்களும்பகர்வாம். (௪௭)

திருவவதாரச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

## மாயாவினோதச்சருக்கம்.

கந்தநாதன்கருணையினாற்கமழ் *
சந்தவண்மைத்தமிழ்சொலப்பூமியில *
வந்தபாலனுமற்றையபாலர்போ *
லந்தவுண்மையயத்தனையகோ. (௧)

ஆவெனாமிக்கழுதனனங்குறுங் *
தாவெள்வாணகைத்தோகையரியாவருங் *
கூவெனைத்தைக்குரவ்விட்டார்கொடி *
மாவெவ்வேறுமஞ்சனமாட்டினார். (௨)

அளவிலெண்ணெயுமன்னநனன் றுமவிட *
டௗதமிழசசுவையொப்பெனவூட்டினார் *
களகிவிட்டுயர்சூரியன்முறசெலும *
வளமையாதியமற்றெதுஞசெயதனர். (௩)

எண்ணிரண்டுதினத்திலிசைந்தபல் *
புண்ணியங்கள்புரிந்தனர்போற்றினார் *
கண்ணிலெண்ணெய்கவிழததனாதிங்களிற் *
றண்ணிலாவியதாயமுகநோக்கினான். (௪)

இரண்டுதிங்கடகிளநகைகாட்டினான் *
றிரண்டுமூனறிற்றிகழநதனனவிணிற *
புரண்டிகையைப்புவியினிலூன்றியோர் *
சரண்டலங்கத்தலையசைத்தாடினான். (௫)

அஞ்சுதிங்களிலாவமிககன்புடன் *
கொஞசுவார்கரங்கொட்டிடலகண்டுதன *
னெஞ்சுவந்துகைநீட்டினனறினி *
லெஞசுறுநிடுப்பேறலவிரும்பினான். (௬)

ஏழுதிங்களிலெட்டினிலொன்பதிற் *
றுழூறுந்தவழந்துநடந்தனன் *
வாழுமபத்திறபதினென்றிலவாய்திறந *
தாழுரங்கொண்டுமொழிதோதினான். (௭)

ஆண்டொன்றெய்தவருணகிரியென *
வேண்டோர்நாமம்விதிமுறையிட்டுநற் *
பூண்டொகுத்தப்புதுக்கலையோடணிந் *
தூண்டொளைக்குளுறைப்பிலதூட்டினர். (௮)

வயதுமூன்றுவரச்சிறுதேருருட் *
டியல்பிறபாட்டிக்கெழிறபெருந்தேர்விழாச *
செயலுநேரத்திகழுநெய்த்திபமுங *
கயல்விழித்தமக்கைக்கெதிரோந்தினன். (௯)

பொருவில்பாட்டிவிண்போயினபுண்பொரு
துருகுமன்னையையூட்டிவளர்த்தசீ *
கருதியேங்குமககாளொடுகெண்டுதா
னிருகணீர்விட்டிரங்கலுமெய்தினன். (௰)

வருடமொன்றுகழித்தபின்மாசிலா *
வருணையீசர்க்கவர்பெருஙகோயிலின் *
முருகுவார்குழன்முனனையையன்னைசெய் *
திருமணத்ததுதீர்ந்துவப்பாகினன. (௰௧)

சற்றுநாண்மகடன்குணமியாவையு *
முற்றுநாடியுவபபுறுந்தாய்மகன் *
முற்றுசீர்பெறன்முன்னிமுறைப்படி *
நற்றுவாவெனிற்கண்கலுழ்ந்தேகுவான். (௰௨)

செல்லல்காட்டித்திரும்பிவந்தாடுவா *
னல்லபாடநவிலவுமஞ்சிடான் *
வல்லபுந்திவகுத்தனனீசனின் *
சொல்லமைந்துன்சுதனவருகின்றிலான். (௰௩)

என்றுகல்வியியற்றுநணோதுசொற் *
றுன்றுகாதுடைத்தாயமனந்துண்ணெனக் *
கன்றுமோர்தினங்கந்தன்கணவில்வந் *
தின்றுதொட்டவனென்மகவென்றனன். (௰௪)

அந்தணாயபூமாதியிலன்னவன் *
னுந்தவாறுமதித்தனள்வாடிலாண் *
மைந்தனேழுவயதுமட்டுற்றபின் *
கந்தநாண்மலர்க்கார்குழற்றுயினை. (௰௫)

விண்ணுலோகர்விழைந்தனர்தான்பெறும் *
பெண்ணுடன்சிறுபிள்ளையென்றெண்ணிடேன் *
மண்ணும்வானுமதிக்கவல்லானவ *
னண்ணுமாறுநடத்தெனச்சொற்றபின். (௰௬)

பெற்றவாறும்பிறங்கிலைவேலுளான் *
சொற்றவாறுமெய்ச்சொல்லெனச்சொல்லினை *
ளற்றமம்மகளப்படிக்கல்லது *
மற்றவாறுசெய்யேனெனமாழ்கினள் (௰௭)

மகாமகோபாத்யாய, டாக்டர்

வாடியேங்கிடுமக்களைவிட்டுவிட்
டோடிவின்னிலுறைதனைளுற்றபின்
கேடிலவேதன்கிளத்தியாள்மறை
பாடிடும்பர்பலசடங்செய்தனா. (மஅ)

வேறு

கூறுமொழிசசரதம்விடாத் தமக்கையன்றி யுல்கின்மற
ரோர்கொழுசொம்பில்லான், றேறுதமிழசிறிதுணர்ந
தமட்டில்விட்டான்றெருதோறு திரியச்சோம்பான்,
சோறுமவள்போயழைத்துகொடுவநதுஉம்பகாந்தா
ற்றுய்ப்பானிநத, வாறுவயதொருபத்தோடிரண்டாகு
மட்டுநன்குவளாநதான்மன்னோ. (மக)

ஆனைவருமாகின்மணி யோசைமுந்தி வருமெனல்போ
லாடலகறகுந, தேனைநிகர்மொழிப்பேதைபெதும்பைய
ரோடுறவாடிச்சிலவாருடி, மானைவென்றவிழிப்பருவம
ங்கையர்க்குமிச்சைகொண்டுமனத்துள்வெட்கிப், பூனை
யெனச்சிறிதுநாட்கழித்தான்பின் பெருவேங்கைபோல்
வான்மாதோ. (உம)

வயதுபதினாறுகுமட்டொருவாறிருந்தான்பின் மாதர்ந
லலார், கயல்விழிப்பார்வையைப்பவளக் கனிவாயைமு
லைத்துணையைக்கண்டுகெண்டு, மயல்வெறிகொண்டான்

றம. கைசலியாமற்றரும்பொருளைவாங்கிவாங்கிப், புய
லபொழிந்தா லெனக்கொடுத்துக் கணிகையர்தம் மனை
தோறும்புகுந்துமீண்டான். (உக)

ஊாவியபபப் புணருமின்னார்களும் வியப்ப விரவுபக
லோயவுருமற், சீரவிதுவெண்குடைவேடன்றிருவிழாந
டத்தியதாறறேகந்தன்னிற, சார்வியாதிகட்கரசாம்பெ
ருநோயின்றொடர்ச்சிகண்டுந்தளர்ந்தானன், கூர்விழி
பபாவையரு மெய்துயபொரு ணிமித்தமருவருப்புக
கொள்ளாபோன்றார். உஉ)

தம்பியையும்பொருள்வழங்குந் தனையுமு லகிகழ்வதனு
[illegible]மகளையன்றேன், வெம்பிணியுற்றதற்கிரங்கித்த
டுப்பதெண்ணியன்னையன்றுவிளம்புமாற்ற, நம்பிநட
தாள்பொருள்போய்ப்பலபணியு மனையும்விற்றுநல்கித்
தீர்ந்தாள், குமபியில்வைத்தாதரித்தார்பலர்கூடியொரு
ருவங்கொள்ளல்போன்றாள். (உங)

தன்றலைமை யிழந்தினத்திற்றாழ்வாறு ளக்கினிமூன்று
விகட்டி, மன்றலணிநதானனையவொருவனுக்கும்வெறு
பபாறுண்மஞ்சட்கொம்பாற், குன்றவிலலாரணிதாலி
பபொன்னைவிற்றுகொடுத்திலலாள்கூலிக்குசசிற், செ
னறவன்று மவனையழைத் தருமையுடனமுதிட்டாள்சி
றிதுநாணன். (உச)

ஆடைசிறுத்துடன்மெலிவுற் றழகுகுன்றிக்கடன்வாங்
கறகளுசிவாடிக், கோடைமயிலபோறறளாவாணிலையை
யுந்தன்னுடற்பிணியுங்குறியாவாற்றான், மேடைசிறுகு
சசானவிதங்கருதான் போவதெண்ணி விரைந்தான்வே
ண்டு, மாடைகொடுத்தனுப்பென்றானப்பொழுதுமனங்
குளிர்ந்தோர்வார்த்தைசொலவாள். (௨௫)

யானுமொருகணிகையன்றி வேறலனீவிரும்புநலமென்
பாற்றுய்ப்பா, யேனுணககதனை தாரஞ்செலும்வருதத
ஞ்சினக்குறிபபென் றெண்ணேலெனறாண், மானுறழ்
கண்ணாண்மொழிக்கீ யன்னவன்காதுடபுகுந்து மனத்
தின்மின்றை, ஞுனுடலிற்கொள்ளுமைய லொருங்கறச
சுட்டதுதிரும்பாதோடிப்போனான். (௨௬)

சென்றவனித்தேகாதி பிரபஞ்சமுழுதுநல்குந்தெய்வ
மொன்றுண், டென்றகிலங்கூறுமொழி மெய்யேயென்
றெளிதுணர்ந்தானிதயம்புண்ணாய், யின்றதற்குப் பழி
கொடுக்கவேண்டுமெனுநதுணிவுற்றானிமயமென்னுங்
குன்றனிகர்வல்லாளன்கோபுரத்தின்மீதேறிக் குதித்திட
டானே. (௨௭)

வல்லாளனருணையுண்ணா முலைபாகர்கோயிலிற்செய்ம
திளிற்கிழபா, லெலலாவின்னவருருவுமமைத்தியற்று
ஞசிகரியின்மீதேறிவீழ்ந்தோற,கொல்லாமற்கிழவிடுந்
துக்குலவுமழுவெண்ணீறுங்கொற்றதண்டு, நல்லா
டைக்கோவணமுந்திகழொருவன்றோன்றிநின்றுநவில
லுற்றான். (௨௮)

இப்படிநீயுயிர்வெறுத்துவிழலாமாறுறைமையிதன்றி
ணிமேற்செயயே, லப்பவத்திற்செயததவங்காத்திவ்வா
றுயிரிழந்தோரனந்தங்கோடி,மெய்ப்பயனெலலாமுனக
கிம்மூர்த்திநலகு மென்றொருசொல விளம்பிசுட்டி,
யப்பழையகோபுரத்துவடவருகிற்றிருவுருவமதனைககா
ட்டி. (௨௯

யாமுனக்குசசொலலல்கவுமாரசடாக்கரமதனையியம்ப
சசேர்மபேல, பாழுழுதுமியற்றுநலம் பாலிக்குமுலக
முற்றும்பரவச்செய்யு, நீமுனைநாளிருந்தவிதந் தனையு
ணர்த்துஞ்சிலநாளி னெடுவேற்செவ்வே, டுமுறுவற்க
ஞிலையார்தம்மோடுமெயின்மீதிற்றுலங்கச்செயயும் ௩௰

என்னுமொழியுணாததானன்னவன்குமரகுருபரவேளெ
னத்தேர்ந்திலலான், றன்னுருவத்தொருகவசியெனபப
ணிந்தான்கருணையினுற்றவளநீற்றை,நன்னுதலிற்றீட்டி
யவனறியமுன்றனைசுட்டியதனடுவிறறுனோ, மின்னுற
ழப்புருந்தான்கண்டேன்வருநதித்தேறிமிகுமவேட்கை
யுற்றான் (௩௧

இன்னவிதம்பாதாளத் தினனொடுசொற் றுயச்செய்வா
னேகுவான்போற், பன்னரியபுகழ்ப்பரிதிப் புத்தேண்
மேற்றிசைக்கடலிற்படிந்தானப்பான், மின்னவிராசிற்றி
டைததமக்கைவீடுதொழுதம்பியினைவினவிக்கோயின்

முன்னனாகிக கண்டமுதாண் முனியேயென்றாளவள்
பான்மொழிவதானான். (௩௨)

அன்னையைநன்கறியேனானாயிரமன்னையுமுனக்கொப
பாகாருண்மை,யுன்னைமுனிந்துயவேனோவுனதுணையா
லென்றனக்கின்றுணாவுண்டாயிற, றெனையிநதக்குக
னாண்டுகொண்டான்மெய்யுனக்கு மென்பேற்றினிற்சற்
றெய்தும், பின்னையொன்றுங்கருதேனினிசுதந்தரசசோ
றருந்தியுயிர்பிழைத்திடேனென்றான. (௩௩)

அந்தமொழிகேட்டவுடன றாய்கனவிறகண்டேனென்ற
றைந்தமாற்ற, மிந்தமட்டின்மெய்யாயிற றெனத்தெளிந
தானாகுகவேளையிறைஞ்சினிறிம், மைந்தனென்றூழ்
றுண்டளவுமருண்டிழன்று னின்றனது மலர்த்தாளன்
பே, சொந்தமெனக்கைக்கொண்டான் புரப்பதுன்றன்க
டனெனாறு சொற்சொலலிப்போனாள். (௩௪)

பொன்போலுமவளருணைப் புனிதனார்கோயிலன்னம்பு
சித்துச்சென்று, ஏன்போடுங் கழித்தருணகிரிநாதன்க
ண்களுநீரருவிகொட்ட, வன்போரும்புகழ்ந்துமனவரு
த்தமுறக்கயிலாயமலைக்குச்சென்றாண், முன்போனபா
ட்டியையுந்தாயையும்போலானந்தமுமூழ்க்குற்றாளே. ❋

வருத்தமுற்றவருணகிரியவனலமுந்தன்னலமுமதித்து
த்தேவித், திருந்தகுகோபுரத்தானை வடவருகின்மாட

மெனச்சிந்தையுடும், பொருத்தமுறச்சிந்தித்துத் தந்
தையைப்போலிரந்தமுதுபுசித்துப்போதப், பெருத்த
குட்டநோயதவிர்ந்தானுலகத்தாரிந்தையெனும் பிணி
யுந்தீர்ந்தான். (௰௬)

முன்னுருவத்தினுஞ்சிறந்தவடிவமுறக்கண்டுடலமோக
மின்னா, பொன்னுதவவேண்டாமென்றனைத்தழுவிக்
கொள்ளலொன்றேபோதுமென்றா, பன்னுமொழிச்சு
வைகருநானவச்சிரபபாறையிற்கடினம படைத்தான
சிந்தை, மன்னுதிருவேடமுமோர் தவசியைப்போல்வந்
துகுகன்வழங்கப்பெற்றான். (௰௭)

கண்டுசிலர்தெண்டனிட்டார்கணிகைமைந்தனெனச்சி
ரித்தாங்கருதிப்போனார், கொண்டுவந்தாங்கமுதளித்தா
ர்சிலர்சிலர்தாங்குகனருளாற் குறித்தசீர்பெற், றீண்டு
வரும்பைம்பொன்னுமிரசதமுமணிக்குவையுமுய்த்தா
ரப்பான், மண்டுபுகழக்கோபுரத்தை யொட்டியொருதி
ருக்கோயில்வயங்கிற்றன்றே. (௰௮)

திருமாலாதியருலகின்மானிடயாக்கையிற்புகுந்துதி
கழவுறாலும், வருமாயையருணகிரிநாதனைச்செயவி
னோதமிந்தமட்டிற்சொன்னேன், மருமாலைக்கடம்பணி
யுமீரிருதோட்செவ்வேளைமனத்தானடி, யருமாந்தமயி
ன்மேற்கண்டருட்பேறுபெற்றவிதமறைகுவேனே. ௰௯

மாயாவினோதச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந் துணை.

முருகக்கடவுடுணை.

## அருட்பேற்றுச்சருக்கம்.

பெருமைப்பிணி பிறபிழைபட்டுழலா *
தருணைசகிகரிக்கழகாகியநல் *
லுருவத்தினுளுற்றவனோதியதைக *
கருதிக்கருகிக்கசிவுற்றனனால். (௧)

முன்வந்தவர்பின்வருமுத்தர்முதற் *
றன்வந்தனைகொள்பவர்தம்முருவோ *
டென்வந்துகனாவிலிலங்கினும்வேன் *
மன்வந்தனனென்றுமதித்தனனே. (௨)

குலிசந்திகழ்சூலமுதற்குளிர்தோள் *
வலிகண்டுவழுத்தெனவந்தொருநா *
ளொளிதங்குகழற்குகனெப்பருசீர் *
மலிசெந்தமிழ்வண்மையளித்தனனே. (௩)

அந்நாண்முதலாவருமைப்பனுவற் *
செந்நாவலர்மெச்சுதிறத்தினவா *
யெந்நாளுமிசைந்திடுமெட்டெழில்வேண் *
முந்நாலுபுயத்தின்மொழிந்தணிவான். (௪)

வானாடர்வழுத்திவணங்குறுநற் *
சேனாபதியென்றுறுசிற்பரவே
டானாவரலூநதியிற்குலவா *
ம்வனானதுமுள்ளிமெலிந்திடுவான். (௫)

கனவிற்சிலகண்டுகளித்ததுபோ *
னனவிற்றிகழாமைநவின்றுழல்வான் *
சினவிற்புருவச்சிலைவேடமினாண் *
மனவிற்கூறிசொலலமகிழ்ந்திடுவான். (௬)

அயலார்மொழியாமசரீரியெலா *
மியல்போடுபொருநதவிசைத்துணர்வான் *
மயலார்தருமற்றவைவிட்டொருவிச் *
சயமாகியபத்திதனைப்புகழ்வான். (௭)

முன்னுசெயுமாறுபுனைச்சிகரிக் *
கின்னுசெலலாமெனவெண்ணிடுவா *
னென்னன்பையறிந்துமெழிற்குகவேள *
கின்னம்புரிகின்றதெனென்றழுவான். (௮)

இத்தெய்வமலாதெவர்செப்பிடலும் *
பொய்த்தெய்வமெனுஞ்சொல்புகன்றிடுவான் *
முத்தெய்வமுமூவுலகத்திலும்வா *
ழெத்தெய்வமுமீதெனவும்பகர்வான். (௯)

அறுமாமுகமாறுநெறிப்பொருளென் *
றிறுமாப்புடனெம்முறையுமடாகர்வான் *
குறுமாமுனிவன்கொளுநன்னிலையைப் *
பெறுமாறுபெருக்கநினைத்தயாவான். ௰

கொள்ளுஞசமையத்தினாமெயக்குருவா *
விள்ளும்பொருள்வேலவனென்றுணர்வான் *
றெள்ளுந்தமிழ்கொண்டுதிருப்புகழே *
யெள்ளும்பிழையின்றிமிகப்பகர்வான். (௰௧)

ஆறுறுசகத்திரமன்பாபெறும் *
பேறுயதிருப்புகழ்பேசியபின *
யாறுதவறத்தொகையானவகப் *
பூறுமவைவினறியுணாதகனலை. (௰௨)

வேறு.

இவ்வாறுநாடோறு முயலருணகிரிநாத னெனுமன்பன் முற், செவ்வானநிகாணு மெயிலமொண்டகுகனீடில சிகிவாகனந், தெவ்வானவருமென்னையலகில்லைபஞசே லெனச்சொற்றுவந, தொவ்வாதமுபிருண்டுவருதுநக வடிவேலொடொளிர்வுற்றனன். (௰௩)

கண்டான்வணங்கிப்புகழ்ந்தானெழுந்தான் கரஞசென் னிமேற், கொண்டானுள்வெப்பங குளிர்ந்தான்மகிழ்ந் தான்குதிக்காடினன், வண்டாயகண்பெற்ற தாய்மாரு

மபபாவருந்தேவலனு,விண்டாரநோக்கக் குறைந்தான
ளபடமறவீறெயதினை. (௰௪)

முக்கடபிரானுக்குமுன்னுளிலன்றேனை மொழிந்திட்ட
தாரு, சிசகமறவுணமைப் பொருட்டநடகொ..ரி
தெளிவாகினேன், மக்கட்குலத்திறபிறநதுந் தனிதெய
வவடிவாகினனை, மெயக்கறபிருநதும்பிறாக்கொத்திருந
தானவிளக்கத்திலே. (௰௫)

வருக்கைப்பலாவின்கனிக்கியையாபோயவரசசொல
லுவாா, மருப்புடபமோாபானமலா5ந்தானல வண்டெவ்
வணஞசுறறுமோ, குருத்தத் நுவதகோனை யெவவாறு
ணாநதன்பாகொளவார்களோ, பொருபபொதநவருனு
புரிக்கோபுரத்தாடலபொலிவுற்றதே. (௰௬)

வந்தாவினைக்கோர்மருந்தானவெண் ணீற்றின்வலியுறற
து, செநதாதுநீபப்புயக்காரன்வேலவென்றி நிகழுவுறற
து, சநதாகரசசெநதமிழப்பாடல பலகோடிநிறைவுறற
து, பொந்தாருமாவிறகுபிறகூவுமநனு பரிநகோபுரம

னையறகொடுத்தறகுமஞ்சாதபுகழகொணடகளிமன்ன
வன், செய்யச்சிறந்துற்றபடியான்மெயடியாாகள்சிருற்ற
து,மையற்றவிர்கதங்குகன்றெணடாதுழுவென்றுமமி

கின்றதாற், பொய்யற்றஞானப்பொருபபாய வருணைபுரி
கமோபுரம். (௰அ)

கூட்டம்பெருக்கின்றகுணரூபம்வைகதெண்ணில்குரு
வானசெவ், வேட்டம்பிரானுக்கு மவனண்ணனுக்கும
பொன்விடாவது, பாட்டநதசந்தம் பகுத்தோதுகவுமா
ர்பலாவநதுசம், பூட்டன்செய்தானென்று குடிகொள்
ளுமருணைபுரிக்கோபுரம். (௰௯)

வள்ளத்தையொகருந்துணைக்கொங்கையெழில்கொ
ண்டமறவளளியைக்,கள்ளததுணிநதோனுமவனேடுது
ணையானகாரானையுங்,கொள்ளததருநதாணமிருமாடமெ
ன்னகவெசாடுதத்டடது,புளளட்டநெடுமாயனெனநீடும
ருணைபுரிக்கோபுரம். (உ௰)

தன்மேன்மையெண்ணித் தனைச்சாருவார்க்குண்மைதர
லுற்றது, நனமேகலைப்பாவைமார்வநதுதினமாடுநடன
கதது, கன்மேலுலாவுங்கழற்கந்தன்விளையாடல்களின்
மிக்கது, பொனமேருவென்னசசிறககினறவருணைபுரிக
கோபுரம். (உக)

கழைக்கைக்குரூரத்தர்தம்மைக்கெடுக்கின்றதகையுமற
பின், பிழைக்கைககிரப்பார்களைவோருமொழிவண்
மைபெருகுற்றது, கழைக்கைச்சமர்க்காரணயனேடுழு
க்காறுகழற்தினம், புழைக்கைக்களிற்றேடுகுகனவா
ழுமருணைபுரிக்கோபுரம். (உஉ)

அக்கோபுரத்தாட்ன்மலிநீர்ஸமகண்டார்களவ்வாலயம்,
புக்கோதவிடமுண்டபெருமானைவழிபாடுபுரிகொண்ட
ரதா, மிக்கோசையுற்றார்கள் வேலோனையங்குறற மே
லோனுடன், றககோர்தகும்பண் பின்முன்பேணிஞரு
ண்மைதனைநாடியே. (உ௩)

விள்ளும்புகழ்ச்சோண கிரிநாதாகோயிற்குள் வியஞா
பொருட, களருநதொழிற்றுட்டர்கண்டஞசியுளளங்
கலஙகிடபல்லா, றெள்ளும்பிணக்குறறகன்றார்களினை
யனமயென்செயவனே, தள்ளுங்கொல்வேலகொணடு
சாடுங்கொலென்னுநதவிப்பெயதியே (உ௪)

வேறு.

வியன்மயிலவிருத்தஞ,செவ்வேல் விருத்தமாதியபலபா
ட, ணயானுறபபகர்நதஙகுற்றானளிர்பொழிலருணைக்கு
ன்றி, னடலருகடுத்துச்சேய்போன்றவிாபழமலையிற்கிழ்
பா, லுயர்குகைதிருத்தியொவ்வோாவேளையாஙகுறறு
மீண்டான். (உ௫)

அடபடிசசிலநாள போககி யறைந்தபாட் டரங்கேற்றற்
கோ,துபபவிாமேனிச்சேந்தன்சொல்லியபடிக்கோதூநீ
ருபபருதமைநததாலோ வுணாக்குமற் றெதனூற்றானே,
வெய்ப்பறலூர்கடோறுமேகினனிச்சையிலலான். (உ௬)

குன்றமுந் துறையுஞ் செம்பொற் கோயிலுங் குறுகிக்
கண்டு, மின்றனோங்கிகா வேற்பெம்மான் வியன்புகழ் விரித்து
ப்பாடிப், பொன்றயங்கிய மேன்மாடம் பொலிகொடி புய
லுக்கப்பாற், சென்றவிர் சிறப்பின் மிக்க செந்திலம் பதியி
ற்சேர்ந்தான். (உஎ)

காருடற் சூரன்மாயக் கணங்களோ டயிலோன் வந்த *
சீருமற் றுளபல்வீறுந் தெளிந்ததா லுவகையெய்தி *
மேருவிட்ட நாள்வந்த வேதியா யுதலங்குள்ளா *
ரியாருமுற் றறிந்து கேட்க விசைத்தமிழ் படிக்க லுற்றான்.

பரங்கிரியாதியாய பலபல தலந்தோறவ்வத், தரம்படுதல
த்திற்காய தமிழினமட்டுரைத்து மீண்டோ, னிரங்கொலி
கடற்செந்தூரி லெவ்வகைத் தலத்தினமீதும், வரம்பெற
வீதொடுத்த பாடலவகையெலாம் வகுத்துச் சொன்னான்.

சந்தனுசலதரசெவ்வே டலையசைத்துவக்கக்கண்
டான, செந்தமிழ்த்தனியான்சொற் றிருப்புகழ் முழுதும்
பாடம், வந்தவாடியேன் பெறறவாழ்வுறவேண்டுமெனவு
ன ந்தவாறளிக்கச் சோம்பே னதுசலென்றுரைக்கக் கே
ளான். (உஅ)

சிந்தெனுங் கடலிற்றன்னைத் திருப்புகழ் முழுதுஞ் சிந்தி
கொந்தெரிமனத்த னுயிறுவலு மேற்றிசையை நோக்கி *

யிநதெனுந்தவளநீறறு நிலந்நிசியம்பதியிற்சேர்ந்தா *
னநதெறியலைபலவாறுநலமிடவுலகோர்கொண்டார். *

அப்பதியடைநதவன்றேனையிலுடைககுமரவேளின் * மெயபபதம் பணிநது போறறிவி யனறிருப்புகழ நால போன, வெபபநோயமலியஙினறுன்வேலையிறசிகறலே லுங, குபபமாவொருககாற்கூடிக தலவுமென்றுணரப பெறறுன். (௯௨)

அத்திருநகரிற்சின்றளமர்நதிருநகருணைக்கோயிற் *
சிதநிர்ச்சிகரிசசேநதென்றெரிசனத்தாவன்மிருசிப் *
பக்தியாலவழியிலுள்ளபருபபகமுழுதும்பாரதது *
முக்திநலகிடுமவ்வூரின்முன் ியவாறுசேர்நதான ௯௩

காயிரும்பனையமேனிக்கடவுள வாழருணைபுரின், மேயி
ருப்பவர்களெலலாம விரும்பினாவினவிச சூழநதார *
கோயிலிற்சிலருமாரவங கொணடனா சிலா நன்புறறு ,
ராயினும்வழககம்போலச்சுகரியிலமாநதிடடாரே. *

ஆடுறுமயின்மீதேறுமயிலவனருடசிறொன்றே *
நாடுறுமவனககோயினன் றகபபுறையும்வேலை *
பீடுறுமவ்வூராளும்பிரபுடதேவனெர்நாண் *
மாடுறும்பலாகளொடும்வந்தனன்மதமாப்போன்றே. ( )

வருமவன்றன்னைப்பாரான்மலைமணங்கமழும்வண்மைத்
திருவடிகருதியுற்றான்சேவகர்சிலர்வந்தொன்னார்,கருவ
றக்கலையுந்திண்டோட்காவலன்வரவுசொன்னா, ரொரு
திருவெண்பாவபபோதனைத்தனனுணர்வின்மிக்கான.

தந்திமாமுகவன்றன்னைச்சற்குருபரனையார்க்கு
முந்தியதம்பிரானைமுறைப்படிவணங்கியுண்மை
மந்திரங்கருதிக்கந்தன்வளமைசேர்பெயர்கொண்டாடி
யுந்திறமாப்புற்றேமற்றொருவராற்பயனியாதென்றான்.

தந்தைமுன்சோழராசன்றனையவமதித்தானென்றிவ்
விந்தைசெய்தான்கொல்வேந்தன் வினவிவந்தருகினின்
று, நுந்தையார்தாயாரென்கு நுவலெனக்கேட்டானப்
போ, தெந்தைவேற்குமரனாத்தா ளிளம்புனக்குறத்தியீ
சன். (௩அ)

ஒருவுறைதனக்குப்பாட்டனுலகெலாமுய்யக்காத்தா
ளருமைசாலபாட்டிமாமனைங்கணைகிழவனம்பொற்
பெருமலைதனைப்பேர்த்தாலும் பெயாக்கொணாப்பிள்ளை
யார்தாம், பொருவிலாப்பெரியதந்தை யெனுங்கவிபுகன்
றான்மாதோ. (௩௯)

நலவிதியினற்கோபநணுகிலானகைத்துககொண்டா
ன், செல்வியின்றோடாபாலீசன்றிரும்பவோர்முறையெ

ன்னென்னுஞ், சொல்விறைவில்றன்பித்தைத்தூயவன்ற
னதென்றோர்ந்தான், தலவியின்பெருமைதானுங் கருதி
டாதான்றன்மன்னே. (௪ம)

பிரணவப்பொருளைசசெவ்வேள்பேசிடப்பெற்றநீரா, ல
ரனகதகியனென்றுள்ளார்ககடுத்தசோதரனுமான, வர
முனிவிளையாட்டிந்தவண்ணமெண்ணிறந்தகோடி, நிர
திசயானந்தத்தேநிலைதருமெய்யருளாறசெய்தான். (௪க)

அன்னதைமுழுதுநதேறெனறையவும்வல்லேனலலேன்
சொன்னமட்டருட்பேறெனனுஞசருக்கத்தைசசருக்கி
யப்பாற், றென்னவறுடைடிவுள்ள திருவிலலிபுத்தூராழ்
வான், றன்னகங்கெடுததவீறு தனைச்சிறிதுணைசெய்வே
னே. (௪உ)

அருட்பேற்றுச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

---

உ

முருகக்கடவுடுணை.

## வில்லிபுத்தூராழ்வார்கலகச்சருக்கம்.

பொதியமால்வரையாதியபலமலைப்பொலிவு *
மதிரும்வார்திரைத்தாம்பிரவன்னியாதியவா *
நதிகளாற்றிகழ்மாட்சியுஞ்செந்தமிழ்நலமும் *
பதியவிண்ணவர்நாட்டினுஞ்சிறந்ததுபாண்டி. (க)

மஞ்சருப்பசுஞ்சோலையும்வண்டுதேனருந்தித் *
துஞ்சலாமலர்த்துணர்களுங்காவிசெங்குமுதங் *
கஞ்சமார்புனல்வாவியின்பெருக்கமுங்கவின்று *
தஞ்சமாமெழிற்புவிமகடலையெனத்துலங்கும. (௨)

ராசனம்பிகைமுருகவேளென்னுமூவருமுன் *
னாசகன்றசெங்கோல்பிடித்தரசியற்றியதால *
வாசவண்டமிழ்ச்சங்கமோர்மூன்றுமன்னியதாற் *
பேசரும்புகழ்ப்படைத்ததுபிறங்குதென்னாடு. (௩)

அஞ்சுருத்தனிவீரமுமாண்மையும்புனித *
மிஞ்சுபான்மையுமீசையுமிரக்கமுமவேலை *
நஞ்சுகொண்டவனடியாறசமண்கெடாவேருங் *
கொஞ்சுமங்கையராடலும்பாடலுங்குலவும். (௪)

வாதவூர்முனிகுருகையூரினன்முதல்வலலோர் *
போதவந்துதித்தளவறப்புகழ்ந்ததென்னாட்டி *
னோதமின்றியசீர்பலகவிஞருமிசைத்தா *
ரோதவேண்டுநருரைப்பவர்பற்பலருளரோ. (௫)

தக்கநாட்டினிற்சதுரவான்கிரிநெடுஞ்சாரன் *
மிக்கசீர்த்திருவில்லிபுத்தூருளதனின் *
மக்களேடுயர்மறைக்குலம்வாழ்வுறவந்தோன் *
றிக்கடங்கவுண்டுமிழ்ந்தவன்பதந்தொழுந்திறலோன். ௬

கொங்குமன்னவனீவேண்டவிறந்ந்நகுலதநினர்சீ *
பொங்குநீஞசுவைததமிழ கக்வியான்மிகப்புகன்றேன்
றங்குசாருவபூமனெனவுறேநபெயாதரித்தோன் [ன்.
மங்குல்போற்கவிபொழியுமோர்துணைவனை வாய்ந்தோ

சநதவான்கவிதொடுப்பதிற்றன்னையேமதித்து *
வநதநாவலரளவிலார்தமமொடுவாதிட் *
டநதமன்னவன்கொடுத்தகூன்வாட்படையதனற் *
செந்தகைசசெவித்துணையறக்கொய்தவிறசிறந்தோன் ;

அனந்தனெனனுமோர்பாவலன்றன்செவியறுப்பான் *
சினநதபோதவனென்பெயர்சசேடனுகவிலையான் *
மனநதளர்ந்திடேனென்றனன்விடுத்துளமகிழ்நதான் *
கனந்தழைத்தசொற்றதிக்குதவியநலங்கண்டு. (௬௯)

தனதுபாடலுக்கொருநயம்வருமெனிற்சமையத் *
தினர்விரோதமெத்தனைவருமாயினுமெண்ணு *
னெனலன்றேனமொன்றெய்தருமிருபததனு *
மனகளின்றொருபன்மிபின்றொடர்ந்தனனந்தோ. (௭௦)

என்றுபாரதத்தியம்பியதன்மையாலிலங்குங் *
கன்றுபார்த்தன்வில்லடியினைப்புகழ்ந்ததுங்காட்டுந் *
துன்றுமுத்தமிழ்மதம்பொழிகளிற்றினைசோர்நது *
குன்றுபேரொலிச்சந்தவாய்க்கோளரியேறே. (௭௧)

வேதியன்றமிழவிழவழவென்பவர்வெருவ
மோதிடுந்தொனிப்பனுவலான்மூதுலகளந்த
வாதிநாரணனடியவர்க்கடிமைசெய்தவவூர்
நீதிவேந்தனுமதித்திடநிகழுமந்நாளில. (௰௨)

கசிமாநகர்விடுத்தொருவாபிணவன்கரியோ
னசிவாழ்கிருப்பதிசிலபார்த்தபின்னறைபூம்
பிச்சியாதியமலர்முடித்துதவுமோர்பேதைக்
கிசியாமகிழாட்டுறுமத்கலந்தேய்ந்தோன். (௰௩)

முழுகிராமமுந்நான்குமிட்டூரிகரிமுகுந்தா
பழுதில்கேசவாநாரணாவெனமிகப்பரவி
யெழுதொணாமறைக்குலத்தினற்சடங்குசற்றியற்றி
யழுதகண்ணுடனஞ்சலிக்கரத்தினனாகி. (௰௪)

கோயிலுட்புகுந்துயர்ந்துளார்விதிப்படிகும்பிட்
டாயினித்தநெய்யடிசிலாதியவயின்றப்பால்
வாயிலிற்சிலநேரமுற்றிருந்தவ்வூர்மாந்தர்
மேயியம்பிடுமொழிகளாலவன்புகழ்விரும்பி. (௰௫)

அந்தவேதியன்சாருவபூமன்வாழகத்தில்
வந்தபோதவன்வாளுடன்றிகழ்ந்தனன்வணங்கி
யிந்தவாள்செயலென்னெனக்கேட்டனனெதிர்த்த
சந்தநாவலர்செவியறுத்திடுமென்றான்சாற்றும் (௰௬)

எங்கணாட்டுறுஞசுதரிசனைசலத்திடத்தோர் *
துங்காவலனைமவன்சுடலையிலாடுந *
சங்கரன்சிறுமகன்பெருமாளெனச்சந்தம் *
பொங்கமார்தரபபொழிபவனெனப்பலர்புகல்வார். (௰௭)

அன்றியெங்களூர்ககுமரகோட்டத்தில்வந்தனனென்று *
சென்றிடுஞ்சிலர்பார்த்துவந்துரைத்தனர்தேகத் *
தொன்றிவீழ்பொடிப்பெருக்கமுங் கோவணத்துடையு *
நின்றிரந்துணுமோடும்வைத்தானெனநிகழ்சீர். (௰௮)

கொண்டுவாழ்பவனுமவன்றன்னிடங்குறுகி *
மண்டும்வாதுசெய்துயரவும்வல்லைகொலென்றான் *
விண்டுவன்னவன்கேட்டலும்வீரமிக்கெய்திக் *
கண்டுசொல்லெனோடங்குவாவென்றனன்கழறும். (௰௯)

குருகைதென்குறுங்குடிமுதற்காண்பதுகுறித்தேன் *
பொருவிலாயெனையனுப்பெனவிரந்தனன்போனான் *
கெருவவாரிதியனையவன்பற்பலர்சேட்ப *
வருனையூரிலோர்புலவனையடக்குதற்காக. (௨௰)

இன்றுபோதுமென்றுருகினங்குறித்தவனியாரு *
நன்றுநன்றெனவிசைந்தனர்தடுத்திலர்நாற்பா *
லென்றுசொல்படைக்காவலனெனப்பலரெண்ணத் *
துன்றுசீருடன்வடதிசைநோக்கினான்றுணிந்தே. (௨௧)

MAHAMAHOPADHYAYA

செல்லும்வேலையிற்சிவிகைதாங்குநர்முதற்சிலர்தா *
மொல்லுநரசகுனங்கிடையாவிதமுனனி *
வெல்லுவானவன்றனெனப்பேசினாமெலல *
வல்லுடன்பகலவினைநதனனைறுணையையடுததான் (௨௨)

ஆனைதோபரியாடபெருக்கணுகல்கண்டயலார் *
சேனையெனறடற்பிரபுடதேவமாராசன *
றனையாததது வருமவனெற்றர்கடாமக் *
கோனைவநதுகண்டுள்ளவாறுணாததனர்குளிர்ந்தாள். *

அன்றுதானெழிற்சிகரியினருகில்வேலணிநது *
நின்றுளானறனதடிமையுமபொருளெனநினைததா *
னின்றுவந்தவன்றேலவியுறறுனமமூர்க்கேறற *
மெனறுமெண்ணினனதற்குளவ்வேதியனேய்ந்தான் *

வேறு.

வரலுமநதவேதியனுக்கரசன்செங்கைமலர்குவிததா னுபசாரமஙியசசெய்தான், புரவலர்தாங்கொடுததவிருதனைத்தும்பார்த்தான்பொருத்தமுறுமிடமமைத்தான்புசிப்பவெலலை, பூரணமனையிலிருநதனுப்பசொன்றனை வேண்டு மனைவிபுதவததக்கோனையருகிற்சேர்த்தா, னுரனுழுபாவலர்க்கிடியேறனையான்கண்டுள்ளுவகையுற்றுவந்தவிதற்றுனாத்திட்டானே. (௨௫)

கேட்டலுமன்னவன்மனந்தோய் வருத்தமோர்பாற்கிட க்கமுன்னோர்வழக்ககமெனுங்கிளர்ச்சிக்களுசி, நாட்டரச ர்க்கொத்தபடிநடப்பேனென்று னலமெனக்கொண்டின் றலதுநாளைக்குன்னூர்க், கூட்டமுடனவனையும்வைத் தென்றன்கல்விக்கொற்ற மறியெனப்பெயர்ந்தான்கூடப் போய்மீண், டோட்டமுதுண்டொருவனையுந் துணைக் கொளளாற்கிவ் வுறுகனுற்றதென்னெனசசற் றுடைந் தானப்பால. (உசு)

தன்னதரண்மனைவாயிற்புலவன்றன்னைத்தனியழைத் திப்பாவலவன்றன்மையாது, நின்னறிவிற்றேன்றியவா றாைத்தியென்றுனெடுநாளாக்கேள்வியிவ னிலத்திற்ப லலோ, ரின்னலுறச்செவியறுப்போன்றனேயென்று னிவ்விடத்தோன்றன்மையென்னென்றிடலுமின்னேன் சொன்னயமாதியபொருந்தப்பாடுவோனே தோல்விவெ ற்றிதெய்வபலஞசொல்லேனென்றான். (உஎ)

நின்னூரமியாதெனக்கேட்பவிருவேழத்தினெடும்போ ரினிடைக்கொதுகைநேர்வேனென்றான், பன்னுமொழி கேட்டுமெய்கண்டுவகைகூர்ந்து பரிந்தவனோ டமைச்சு முதற்சிலரையேவி, மன்னுபுகழருணகிரிநாதன்றன்பா ல்வணக்கமுடனடந்தவிதம்வகையாய்ச்சொல்லி, யென் னுதவிவேண்டுவதியாதென்னக்கேண்மின்னெனவனுப் பியரண்மனைக்குள்ளேகினனே. (உஅ)

வேந்தனுரைகேட்டவர்தாஞ்சிகரிக்கேகிவிளம்பும்வ
ண்ணம்விளம்பவந்தமேலோனன்று, சாநதமனஞ் சிறி
துகொதிப்பெய்தியென்றுந் தமியேனுக் குதவிசெய்யத்
தக்கோனை, சேந்தனுக்குமவன்றமையன்றந்தைதாய்க
குஞ்செறிந்தமற்றப்பரிவாரத்தெய்வங்கட்கும், போந்த
வுபசாரமிகச் செய்வித்தோரம் புகலாமற்பொதுவாதல்
போதுமென்முன். (உகூ)

அம்மொழிகொண்டவருரைக்கவரசன்கேட்டானதிவி
யப்புற்றறிவோமென்றடுத்தநாளிற், செம்மொழியாகம
விதியாலபிடேகாதிச்சிறப்புமிகச் செய்வித்தான்சிகரிக்
கேகி, மெய்ம்மொழிச்செந்தமிழருணைநாதன்முன்போ
ல்வெறுத்துரையாதுபசாரம் விளம்பப்பெற்று, னெம்
மொழிக்குமிசைந்தமறு.மொழிதான்சொற்று னீட்டமு
ற்றுமோவியமபோலியங்கக்கண்டான். (௩0)

தக்கவரையனுப்பியிதேதருணமென்றுசாருவபூமனு
க்குரைத்தான்சரபந்தன்னைக், கைக்களிறென்றெண்ணி
யதோர்மடங்கல்போலக்கடுகிவந்தான் வரும்வழியிற்கா
ண்பாரெல்லா, முக்கணர்தந்திருக்கோயிற்சிகரிக்காவ
ன்முருகோனையருணகிரிமுனியைவேந்தை, யக்கவிஞ
ன்றனைவினையைக்காலந்தன்னை யாதரவாக்கொண்டுபல்
வாறறைந்தார்மாதோ. (௩க)

வந்தவனையரசனமைச்சாதியோர்போன்மாதவத்தால ருணகிரிவரன்பேர்வாய்ந்தோ,னந்தணனென்றிடுமுறை யாலுபசரித்தானருந்தவனென்றவன்மதியாததட்டிப்பே சிச், சந்தமொழிந்தனையெனக்கேட்டிங்குவந்தேன்சாற் றுகென்றான்சாற்றுகின்றேன்றடையொன்றில்லை,வெந்த றுகணைகொள்ளேன்மின்னெனமுன்சொலவிவிகடபரிம ளமெனும்பாவிளம்பினனே. (௬௨)

கோடையிடியிடித்தாற்போன்முழக்கங்கொண்டான் கூறிமறறோகவிதொடுத்துக்கொள்ளுமுன்ன, மாடை யமபொறபணியாதியணியுமற்றோனவையறியவிக்கவி நம்மடப்பக்காரன், சாடையினிற்சொலவிடுவானென நாடோறுந்தலைக்கேறுமாணவத்தாற்றவறிச்சொன்னான் மாடைமலையனையபுயத்தரசன்கேட்டிம் மாற்றமியல்பல் லவென்றான்மயிலோனன்பன். (௬௩)

கண்கணெருப்பெழச்சினந்தக்கவியைநோக்கிக்கழ றுமொழியிதமறியாய் கவியென்சொல்வாய், வண்கவி தைநீயுரைப்பதுளதோவென்றோர்மசகமெனமதித்தான மமடடின்மன்னன், றிண்கழற்காலியானையெனவெழுந் துநின்றுசீரியநீரிவ்வணம் போர்செயன்றல்லப், பண் கவிஞரொருவர்சொல்லவொருவர்கேட்டுப் பயனுரைக் கவேண்டுமெனப்பகர்ந்தானன்றே. (௬௪)

முன்னாளிலேயெழுவர்கலகந்தீர்த்த முழுப்புலவன ருகினின்றுமுறைகுன்றாமற், றன்றாவாற்குழிப்பெடுத் துக்கொடுத்துச்சந்தத்தமிழ்பாடச சொல்லியன்னோர்த ரங்காட்டில்லான், மன்னனிவ்வாறுசொல்லப்பெற்றாரவ் வூர் மாதவன்பாட்டினைத்திடவாய்திறந்தான்வந்தோன், பின்னாலேபொருளுரைத்தான்றுவக்குமந்நூல்பேசுகவி பாதியின்மேற்பெயர்ந்ததம்மா. (௫௫)

கந்தனந்தாதியினியமகக்கவியோர்நூற்றிற்கழறுமை ம்பதாயபின்னர்கருத்துட்கொளச, னொந்தருணகிரிநா தன்முருகவேளைநோக்கினான்றிதத்தவெனநுவலோர்பா டல், வந்ததொருவருக்கத்தாலருத்தகஞ்செல்லமாட்டா மல்வேதியன்றான்மாழ்கிச்சோர்ந்தா, னந்தகன்போற்ப ற்பலர்காதறுத்தபாவமமைந்ததிந்நாளெனக்கெனச்சொ ற்றாண்மைதீர்ந்தான். ௫௬)

மன்னன்முதற்பலருமிவன்காதுகொய்தல்வழக்கென் றாருணகிரிவண்மைப்பேரோ, னென்னபயன்கொய்தத னாற்கொய்யாவிட்டாலியான்கொடுத்தகாதெனப்பேரிரு க்குமென்றா, னன்னமொழிகேட்டெவரு மதிசயித்தா ரந்தணனுங்களிகூர்ந்தா னவன்கைவாளைப், பின்னமற் றோனுனக்காகாதென்றுவாங்கிப் பிரபுடதேவனுக்களித் துப்பேணென்றானே. (௫௭)

வேதியன்போன்மாதவன்றான்றோல்வியுற்றாலவிடமாட்டான்செவியறுத்தேவிடுவானென்றாங், கோதினாபற்பலரவனவ்வொருபாட்டிற்குமுரைகேட்டுக்கொண்டுமுற்றுமுரைத்தபின்னர், நீதிவழியுரையெழுதிமுடித்தோர்பாட்டுநிகழ்த்தினனருணேசனென்னசசுட்டிக், தீதில்கவிக்கடலேழுங்கடந்ததென்றாரு சிந்தைமகிழ்ந்தேமெனவுந்திகழ்மனனே. (௫௮)

அருட்பேறறினருணகிரிதுவக்கும்பாடலானந்தம்பிளைத்ததனையடக்கிக்கொண்டே, யிருட்கோரத்தாலிகழ்ந்தபடியாலன்றேவிறுமாப்புங்கொடுவாளுமிழந்ததன்றிப், பொருட்கூறிப்புலமையில்லையெனனுஞ்சொல்லுமபுந்தியினிற்றோன்றுமற் போயிறந்தேனுந், தெருட்சீரோனுதவினுறமற்றோல்வியேற்றுச் சிரங்குனிந்தானப்பெருமைசிறிதன்றமமா. (௫௯)

இருவர்களும்வண்ணநலமுணர்ந்தோர்கூட்டத்தேற்றமுற்றோராயிருந்துமிகலிக்கொண்டு, பொருபுலவர்பாடலதே யென்றுமுன்னூல் புகன்றிருந்தும் வாளுமதன்பொருத்தமாயு, மருமலிவெண்டாமரையாளரையனுவில்வந்திருந்தவ்வாறுரைத்துமாற்றுநீராற், றிருவருளின்செயலன்றிச்செயலொன்றில்லாத்திறத்தையெளிதுணர்ந்துகொள்வார்சிறந்துள்ளோரே. (௬௰)

# ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள்புராணம்

பொல்லானென்றிடும்பெயர்போயருணைநாதன்புகழி
ருக்குமட்டழியாப்புகழ்ச்சீர்தோய்ந்து, வல்லாண்மை
வேதியன்றன்னூரிற்சென்று வாழ்ந்திருந்தா னிக்கதை
யிம்மட்டிற்சொற்றே, னெல்லாருமத்தவத்தோன்றன்னை
மெச்சுமியல்புசகியாதழுக்காறெய்திவாடி, யில்லாதப
கைவிளைத்தசம்பந்தாண்டா னெனுமொருவனறன்னை
வென்றதியம்புவேனே. (௬௧)

வில்லிபுத்தூராழ்வார் கலகச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

## சம்பந்தாண்டான்விகாதச்சருக்கம்

மன்னவர்வணங்குஞ்சீரோன்மந்திரம்பெரிதுகற்றே
னன்னவாகனனேபோலுமருகனுக்கடிமையானேன், ப
ன்னருந்தமிழ்ச்சொற்சாரம்பதிந்திடா மனத்துப்பாவி,
தன்னகமண்டகோளந்தனில்வளர்சம்பந்தாண்டான். (௧

பெற்றவர்தமக்குமீளாப்பெருநரகளிக்கும்பெற்றி, யு
ற்றவனிரட்டையார்தாமொருகிறிக்கவிதையோத, மற்ற

வர்தம்பான்மன்னுமலுக்கெனவலியச்சொன்னான், கு
ற்றமி லருணையூர்க்கோ கோதெனக் குடிகொண்டுள்
ளான். (௨)

மற்றையர்புகழ்ச்சிகேட்கின்மனமிகவருந்துந்தீயோ
ன், பற்றைவென்றவர்க்குளுசெஞ்சொற்பாவலர்தமக்கு
மாகான், பொற்றைபோற்பொலிந்ததேகன் பூருவப்பய
னியாதாலோ, கற்றையங்குழற்பிராட்டி கருணைநற்பெ
யரோடுற்றான். (௩)

உளளியின்றழைக்குநாம முயர்மருக்கொழுந்தென்
றோதி, யெள்ளிடற்கரியசவ்வாதினைமிகப்பூசலபோலத்
தெள்ளியகுரவன்பெருஞ்சிறப்பனையருளுந்தோயத், த
ன்னிடுஞ்சமணப்பாவிதனக்கயனமைத்திட்டானே. (௪)

சமணனைமவன்முன்னாளிற் றன்னெறித் தலைவர்தம்
மைத், தமரொடுகழுவிலேற்றிசைவனைப்புரந்துளான
றன், விமலமாநதிருப்பேர்கொள்ளண்மெல்லியமேடக்க
னறு, சமரவல்வேலகைநாமந்தனைக்கொளல் போன்றத
ன்றே (௫)

தன்னுடைக்கணவன்றன்னைத்தணந்துமற்றொருவன்
றன்னுற, பன்னுசீர்மகவும்பெறமுள் பழைய மங்கலங்
கொணடாற்போன், மன்னுசாத்தேயனாகி மனக்களிப்
பண்டாந்துமன்னேன், முன்னுளசமணமார்க்கமுறைப்ப
டிநடித்தான்மன்னே. (௬)

அறங்களின் முயன்றிடாமலலகையூட்டாதிசெய்வோர், பிறங்குபொற்கிழிபெற்றுற்போற் பெரியனைப்பேணிடாமன், மறநகொள்வானுகுமன்றேன் மலேமகண்மலர்க்கண்ணுடிந், திறங்கொடிபுவியிலியாருந திடுக்குறத்திகழந்தானந்தோ. (எ)

சிநதுரந்திருநீறிட்டுச் சிவபிரான்மகிழந்துநோக்கு, மிந்துநேர்முகத்தெம்பாட்டிக் கினியதொண்டியற்றிலானல, வெந்துறுகுணத்தைநீக்கிமெய்புணர்வளித்திலாடான், வந்துறசெபித்ததாயமந்திரப்பலன்மட்டுந்தாள். எத்தனேபேறுநல்குமெழிற்பனையருள்விலாச, மத்தனேதானென்றெண்ணியளப்பருங்களிப்பனுன், புத்தமிழ்துதவுந்தீம்பாற்புணரியைப்பூனேகாணின், மொத்தமுங்குடியாமுன்னந்திருத்தியின்முழுகுமாபோல். (அ)

அன்னவனவ்வூராரு மரசனுமதிக்கப்பெற்றுத், தன்னலங்கருதிவாழவான் றமிழபபெருந சிறப்புவாய்ந்த, தென்னனுட்டாழ்வான்மெச்சுந்திறத்தினனெருவன்கோயின், முன்னமர்ந்திடக்கண்டியாரு மொழிபுகழசகியானுன். (௯)

தினந்தனபுரப்போன்றன்பாற் சிகரிமா முனிவன்சீனா, மனந்தனின்மதிக்கொண்ணுத வண்ணமிக்குனாத்

துவந்தான், கணந்தனைப்புனையுமோதைக்கவிபொழிந்தி டலுங்காதைச, சினந்தறத்திடவநதான்றன் செவிபுரந ததுங்கண்டோனல். (ம௧)

மற்றவன்கரத்துவாளைவாங்கினேன் வைத்துக்கொள் ளா, துற்றதன்கரத்தினல்குமுணர்வையுமுன்னியுன்னி ப், பற்றனுவளவுமிலலான்பகைபிவற்குளதென்றோர்ந் து,நற்றலையசைததுககேட்டுநாட்சிலகழித்தான்மனனே

அவனழுக்காறுகண்டுமம்பிகையருட்சீர்க்கருசிப்,பு வனியையாளும்வேநதன்பொதுபபடவிருநதானன்றோ ன், கவனமோசிறிதுகறறகள்வனுடகருததோராமற்,ற வனெனகருதிததாய்தெய்வததன்மை காடடிடசொல் லென்றான். (மரு)

என்றலுமரசனென்றற்கிருவருமினியர்தாமே, புன்ற கையினனென்றியாளைபபுகலுவேனென்றான்கேட்டு, ந ன்றலதுயர்ச்சிதாழச்சிநாடடினிலறிந்துகொள்ளல், கு ன்றநேர்புயத்துமன்னர்குலத்தினுக்கடுததன்றே மச)

இன்னமும்பலனைக்காண்பா யாவருமுயர்ந்தோர்தா மென், றன்னவர்க்கெல்லாநீயோ ரடிமை யொத்தடஙக லாமோ, வுன்னதுகுலத்துளளாரு முலகரு மதிப்பார் கொல்லோ, வென்னவிவ்வண்ணம்பல்வாறிசைத்தனனி சைந்தான்மன்னன. (மடு)

தந்திரங்காலநோக்கஞ்சமையமாதியமூற்றோர்ந்த,ம ந்திரிதன்னைக்கோயில்வாயிலின்வடபாற்கேவிச, சந்திர ன்றரித்தவேணித்தலைவனார்மதலைக்கான, வந்தியன்றன் பாலிந்தவாறுரைத்திறைஞ்சசொன்னான். (௰சு)

அவ்வமைச்சாங்குற்றன்போடந்தமாதவனைப்பேணி மௌவலந்திண்டோண்மன்னன்வாழ்வினுக்கிறுதிகொ ல்லென், னெவ்வமுற்றிடைந்தவாறுமெணணமுமிறு மாந்துள்ள, வெவ்வரவனையான்செய்தவிதங்களும்விரி த்துவீழ்ந்தான். (௰எ)

தெண்டனிட்டவனைநோக்கிச்செழுந்தமிழ்க்கடலே யன்னான், விண்டலம்புரந்தவேலோன் மேவலிசசிகரி தானே, மண்டலத்தெண்ணிலகோடிமலைகளுண்டவற றாடொன்றிற், றொண்டாபற்பலர்கொண்டாடத்துதி ததுயப்போதுமென்றான். (௰அ)

கேட்டலுமழுதுகெஞசிக் கேடெனக்கிதில்வேறில் லை, நாட்டரசனுககுமுன்போய் நானிதைநவின்றலெ ன்னை, வீட்டலுஞ்செய்வானென்னவெருண்டனனிரங கிச்செவ்வேட், காட்டலுக்கிசைநதுநாளுஙகவினுறுந தலமுஞ்சொற்றான். (௰கூ)

புன்மையோர்சிறிதுந்தோயாப்புலவன்வாய்ப்புதுச் சொறபெறற, நன்மையாலமைச்சனார்வநளிாகடன்மூ

ழ்கிமீண்டு, வன்மையோர்க்கியமன்போலுமன்னன்மு
ற்குறுகிவாய்ந்த, தன்மைமுற்றுரைக்கும்போதுசமண
ருயகிருந்தான்சாற்றும். (உ௰)

அவனைபிற்குமரன்றன்னையழைக்குமத்தினத்தின்மு
ன்னு, ளுவகையோடுமையைநீகா ணுறப்புரிந்திடுவே
னென்றான், றவன்மொழிந்திடலுமற்றேன்சாற்றலுங்க
ருதிமன்ன, னிவணமக்கெய்துங்கொலலோ வெனக்க
ளித்தையமுற்றான். (உக)

அண்டரூர்புரக்குஞ்சேர்ந்தனடிமைதான்சொலுமீரொ
ண்காள், மண்டபத்திசானத்தின்மன்னுதூணத்னைச்சா
ர்ந்துரு, சண்டனேரமணன்சொன்னதலத்தினுந்தனி
சசிர்ப்பந்தரீ, குண்டம்வேதிகையொப்பாய கோலமிக்
கமையசெய்து. (உஉ)

வேண்டுவபிறவுஞ்சேர்த்து விழித்துயில்வின்றிவேந்
த, னூண்டுவரிதழார்போகமொப்பனைகைப்பவோர்வர,
ருண்டுசின்னரூம்பன்றளாகவீற்றிருந்தான்முரு, மூ
ண்டுமுற்பகைசெய்திட்டோன் மொழிந்தநா ளுதித்தத
ம்மா. (உங)

## வேறு.

அந்தநா ளுதித்தலுமவன்விதிப்படியம்பிகையருட்
கோலஞ், சிந்தனைக்குள்வைத்தோமமாதியபலதிருச
சடங்குகள்செயதீண், டிந்தவேளையிலரசனுமறியவந்

திலங்கெனப்பலவாறு, நொந்தயர்ந்தலறெழுந்தொரு
மூன்றையுநுவன்றசைவறநின்றான். ௨௪)

அத்தினதெழிலருணைநாயகன்பெயரமைந்தவனாயி
ல்வேளைத், துத்தியம்புரிந்தின்றவன்மொழிப்படிதுலங்
கிடாதருளென்று, பத்தியான்மிகப்பணிந்துகெஞ்சின
ன்சமர்ப்படுகளத்தொப்பாரி, வைத்திருக்குமஞ்ஞான
ம்விட்டனனதுவம்பலமுறைதானே. (௨௫)

அடிமைவேண்டலுமறுமுகக்குருபரனம்பிகையெ
னுந்தாய்தன், மடியின்மீதுசென்றிருந்தனனன்னவண்
மனமுழுதுவப்பாகும், படிபல்லாயிரமாடல்கள்பயின்
றனன்பரிந்தழைப்பவனூடு, வடிவுசூக்குமமாக்கொடு
தோன்றியென்மதலையாற்றடைப்பட்டேன். (௨௬)

இன்றுநீயழைத்திடிற்பிறர்காணவந்திலங்கிடேனெ
னச்சொன்னாள், கன்றுதன்மையனாகினன்வெயர்த்தன
ன்காவலனெதிர்காணி, நின்றுகூறினன்றவத்தினரறியு
மந்நிச்சயந்தனைக்காணா, னென்றுபொய்த்ததுமற்றதெ
ன்னாங்கொலென்றுளதகினுட்டுயருற்றான். (௨௭)

ஊருளோர்சிலர்திருடனென்றிகழ்ந்தனருண்மைதா
னெனக்கொணாசப்பேருரைத்தனரப்படியாகிலப்பெரிய
வன்றவமாய, சீருயர்சசியன்றோவெனச்சிற்சிலர்செப்பி
னரதைநாளைப், பாருமென்றனர்சிலரிவ்வாறளப்பரும்
பலவிதம்பகர்ந்தாரே. (௨௮)

அங்கு தன்னுயிர்விடுப்பதற்கஞ்சியவமணனுள்ளவ
மானம், பொங்குகோபமுற்றிடும்படிசெயவவன்புரவல
ன்றனைநோக்கி, யிங்குனமந்திரியிடகதிலெனனிகலவ
னியமபியபடிசெய்யின், மங்குருமலைச்சாலையிற்கப்பு
றம்வசிப்பனென்றனன்மன்னே. (௨௯)

அன்னபும்புனலும்புசிப்பிருந்தவாறவன்வலிதம்மாற்
றனு,சொன்னபின்பனைகழல்பணிந்திகலவனசொல்லிய
படிநாளை,வன்னமாமயிற்குகன்வராதருளெனவருந்திய
ன்னவட்கான, நன்னயத்துபசாரமிக்கியற்றிடனண்ணி
னன்மனைபுக்கான். (௩௰)

ஆயவளைபுகழ்போயதுபோற்பகலகன்றதன்னவன்
கொள்ளுந், தியவாணவமபோலிருள்செறிந்ததுதிருப்
புகழுமிகப்பாடும்,வாயனோர்வபுங்கிடுக்கபுமருவினன்ம
ன்னரண்மனைக்கேகிக், காயமுஞ்சலித்துறுகணேடை
யமுங்கலந்தநுபவித்தானே. (௩௧)

அருணையூரின்மட்டவ்விராவொருயுகமாகிகழ்ந்ததனிற்
றில, வருணமாமணிமரகதகிறப்பரி மன்னியபெருந்தே
ரோன், பொருவின்மண்டபத்தூணினில்லேலவன்பொ
லிதருந்திருககாட்சிக், கருகரியாரெனப்பார்க்கவந்திட
லெனவவிர்நதனன்குணதிக்கில். (௩௨)

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம

மன்னனாகியரியாவருமவ்வயின்வந்தடைந்தனர்வான்
றோய், பொன்னங்கோபுரத்தருந்தவன்முழுகினன்பொ
டியணியுடன்முற்றுங், துன்னவந்தெழிற்காவணம்புகு
ந்தனன்சூழவேழ்திரையிட்டான், பன்னருங்கிரியாவிதி
ப்படிமிகப்பரிந்துபூசனைசெய்தான். (௩௩)

முந்துநாட்டனைத்தடைசெயுமுருகனைமொய்குழன்
முகில்சாரு, மிந்துநேர்முகத்தம்பிகைமடியில்வைத்தி
னியவாசகங்கூறிப், பந்துநேர்முலைப்பால்வலிதுதவின
ள்பரிந்துவந்தருளில்லா, னைந்துமூவிருபொறியையு
ங்கருதியுண்ணோக்கமுற்றதுகண்டான். (௩௪)

மயிலைவேண்டினன்மனங்கசிந்துருகினன்வகுப்பினா
ற்றுதிசெய்தா, னயிலினோடவற்கொணர்தியேலுயிரவி
டேனசத்தியமலவென்றான், கயிலைமால்வரைச்சாரலிற்
றிரிவதுகருத்தினாலுணர்ந்தாங்குற், றயில்குலாவிய
நடம்புரிந்தகவியதுமையவள்களிகூர்ந்தாள். (௩௫)

நீலகண்டமுநெடியபாம்பணிகளுநிருத்தமும்துகாட
டக், காலகாலன்மேனினைவுவந்தெழுந்தனள்கருநிறசச
மணன்றான், வேலனன்னவள்வசத்துறலறிதலுமிகமெ
லிந்தவடன்னைச், சாலவேண்டுதன்மறந்தனனாயவத்தன்
மையினாலன்றே. (௩௬)

அவன்விருப்பமொத்ததுசெயல்விடுத்தனளன்னவளத
ஞலே, தவமுனுண்மிகபபுரிநதுளாரவரவர்தாம்வணங்
கிடுங்தெய்வங, கவனமுடித்தாபிரமுறுதிகள்கழறினு
மிறுமாப்போ, டுவகையுற்றிடாதையமுநதுயருமுற்று
ருகுவருலகத்தே. (கூஎ)

தெய்வமப்படிநம்பியபேர்களைச் சிரழித்திடமாட்டா
துய்வதற்குமெயப்பத்திபிறகருமமேயுயர்ச்சியென்றிடி
லவ்வா, றெய்வதுண்டுமென்றுரைத்தனாமேலவரோன்ற
கூவியின்வேலை, செய்வதுஞ்சிசுவாதலும்பகரிருதிறத்
திணுக்கிணையாமே. (கூஅ)

முககணன்றனையவணினைங்தெழும்படிமுடிங்தவாறி
லையேனுங், கைக்கணிந்தவேலாயவள்குகனிடஙகவின்
றதுமெய்யாமா, லெக்கணத்தினிற்கருதினுமவரத்தகு
மிருந்ததெவ்விதத்தாலோ, வக்கலாபியைநேருமைமடி
யைவிட்டணிமயிலிவர்ந்தானே. (கூகூ)

வேறு.

ஏறியதுந்தூணிடைவந்தெய்தியது மொருகணமெ
ன்றியம்பவந்தான், வேறிணைதிருருணகிரிநாதனந்தக்க
ணத்தின்மிகவெதும்பி யேங்கிக், கூறியபோதெகிர்வ
ருநீயின்றெனக்கு வருத்தமிகக் கொடுத்தாயென்றான்,

றேயிடத்தேற்றினன்றெளிந்தான்றிருவுளத்தின்குறிப்பு
ணர்ந்துதிரையைநீக்கி. (௪௰)

வெளியில்வந்தான்சலிப்புற்றும்வெருட்சியுற்றும்ப
ற்பலர்தாம்விலகிப்போயு, மளிமலிதார்ப்பிரபுடதேவனு
க்கடுத்துநின்றசிலராங்குவீசு, மொளிசகியாதவசமுற்று
ரவனொருவன்மணிமுடிமீதுறுங்கையோடு, களிசிறப்
பநிற்கைகண்டானிவன்றவநன்றாகுமெனக்கருதிச்சொ
லவான். (௪௧)

நின்பார்வைக்கடங்காதுநெடுவேலான்றிருவுருவினி
லவுங்காட்சி, யென்பார்வைக்கெய்துவதோர்காரணத்
தாலந்தவிதமியம்பொண்ணாது, பின்பார்வைக்கொருக
ண்வைத்துமற்றொன்றாற்பாரொன்றான்பேசாதுட்போய்
த், தன்பார்வைக்கண்ணிரண்டிங்கொடுபார்த்தான்பே
ராசைதழைததாலே. (௪௨)

கண்டுதொழுதிருவிழியும்பறிகொடுத்தானானோங்க
ருத்துடன்றேன், வண்டுவார்ச்சீர்த்திருவுருவுமணிபப
ணியுமயின்முதலாவனவும்வந்து, மண்டுதலிற்களிப்பு
றான்மாதவத்தோனறிந்துகுகன் மலர்த்தாள்பேணித்,
தொண்டுசெயவல்லான்கண் கெடலாமா கொடுத்திடெ
னச்சொல்லிநொந்தான். (௪௩)

செவ்வேற்கைகுமரகுருபரமுருகனருள்கூர்ந்துதி
ர டோள்வேந்தற், கவ்வேலைகண்கொடுத்தானருணகிரி
யுள்ளத்தோவணிக்கம்பத்தோ,மைவேட்குஞ்சிகரிநெடு
மாடத்தோபற்பலவாமலையிலேயோ,மெய்வேதச்சிரத்தி
லோவாகமத்தோயாவினுமோமேவலுற்றான். (௪௪)

மன்னருணகிரிநாதன்றனையுமத்தாணிடத்தினிதுவ
யங்காநிற்குஞ், சின்னவடிவுடைக்குமரன்றனையுமினி
திறைஞ்சியினிச்செய்யுமாறிங், கென்னவென்றான்றவ
னிதனையொட்டியொரு திருக்கோயிலியற்றி யப்பாற்,
பொன்னவிர்கோபுரமதிளாயிரக்கான்மண்டபமுதற்செ
யமைப்பாதுமென்றான். (௪௫)

ஆனந்தமுகமலர்ச்சியுடனிசைந்தானிச்சம்பந்தா
ண்டானிங்கு, நானன்புசெய்தாலுங்குடியிரானவன்சப
தகவின்றுள்ளான்மெய், வானந்தோண்டுதற்றுவக்கப்
போகின்றேன்மதிட்குளவன்மனையுமாகா, தீனஞ்செய்
வானிருந்த தலத்திலென்னசெயலாகுஞ் செப்புகென்
றான். (௪௬)

அந்தமொழிகேட்டருணகிரியுரைப்பானவனையவம
திக்கவேண்டாங், கந்தமலர்க்குழலுமையாளடிமைதா
னழுக்காற்றாற்கனற்கோபத்தாற், செந்தகையபுகழிழந்
தான்வேறுமனையமைத்தாலுஞ்சிந்தையொப்பா, னொங்

தவிதம்போனாலும் போகட்டும்மாவியொன்றுங் கியற்றென்றேதி. (சஎ)

புரவலனையனுப்பியப்பாற்றான்வசிக்குங்கோபுரத்திற்புக்கான்மன்னன், பரவசந்தீரநெழுமமைச்சனாதியரோடுவகைமொழிபகர்ந்துபோய்த்தன், னரண்மனையிற்புகுந்துடனே களஞ்சியத்துப்பொருளையெல்லாமள்ளிசசிறப்பத், திரமுணர்வார்முதலோர்க்குகொடுத்தரியதிருப்பணிகள்செயச்சொன்னானே. (சஅ)

எற்றுநூற்காரரொட்டர்கற்றசசராதியரோடிகல்வேந்தேவப், பெற்றுளசேவகர்பலர்க்கு வெவ்வேறுமனையமைத்துப்பெயர்ப்பதன்றிச், சுற்றுமதிட்காரம்பஞ்செய்வதுவுங்கண்டமனன்றுணுக்கமுற்றான், மற்றுளமாணிடர்பலவாறருணகிரிதனைப்புகழ்ந்து வணங்கினரே.

தன்றேல்வியறிந்துமக்தச்சமணர்பிரான்மன்னனிடந்தனித்துப்போய்முன், னின்றேநுமென்னவித்தையவன்செய்தானரண்மனையி னிறைத்துவைத்த, பொன்றேற்கத்துணிந்தனையேதூணினுகருங்கோயில்கட்டல்புவியிலுண்டோ, நன்றேதலழிதியென்றுணறியாதிந்தவிதநடத்துவேனோ. (ருய)

என்றுணாத்துமன்னனெனக்கையமில்லையுனக்கையமிருக்குமாறும், சென்றுணர்ந்துகொள்ளெனவுஞ்செ

ட்பிறனைப்படியேசிகரிகவேகி,நின்றுபலநிந்தைசெய்தா
ன்கேட்டருணகிரிநாதனேரில்வந்தா,னன்றுவிணணுறா
ர்த்தருமலரைககொணர்தியென்றா னரசனும்போய்நடு
வனானன். (௫௧)

நலலரசைநோக்கியந்தநாதனயிற்குருபரனைநம்பும
ன்பர், வல்லமைதேர்ந்தறியாவிவ்வம்பன்மொழியையநி
ன்பால்வருத்தலுண்டேற், சொலலமரர்தம்மூரின்மலர்
கொணாதியெனநீயுஞ்சொல்கின்றாயோ,மெல்லவிவன்
சொற்சபதமறந்தவர்போலவிடுத்தனையோ விளம்பு கெ
ன்று. (௫௨)

வினவலும்வேந்துளநடுங்கியையமெனக்கேதுனரு
ண்மேவப்பெற்று, மெனதுகடனித்ததியில்வரலன்றோ
வெனப்பணிநதானிமையார்வாழுங், கனகநகர்த்தரும
லருங்காட்டுதுநீயிவன்மனையிற்கவினாவாவி, புனலொ
டுசெய்திளையனார்க்கபிடேகஞ்செய்திவனமுன் புகன்ற
வாறு. (௫௩)

வேறுநகர்க்கேகிடச்செய்விரைவிலென்றானம்முனி
வன்விடப்பாம்பென்னச், சீறுசினத்தமணர்தங்கோன்
றனைநோக்கித்தேர்வேந்தன்செப்புமுன்ன. நூறுதரமிங்
கிருக்கச்சொன்னாலும்போவேன்பின் னுவன்றகண்ண,
நாறுமலரிவன்கொணருநாளிலவந்து போதன்மட்டின
யந்தேனென்றான். (௫௪)

## வேறு.

அந்தமொழிப்படியிசைதற்கரசனஞ்சியருளாளன் *
சுந்தரமாமுகநோக்கசசுகமேயத்தினத்திலிங்கு *
வந்தறிந்துபின்போகுமட்டிலொப்பென்றனவன்றன் *
வெந்தகைமுற்றுணராதவேந்தனுமப்படிச்சொன்னனை

அக்கணமேயவ்வூர்விட்டயலூருக்கவன்போனான், பக்கமொருபன்னிரண்டிற்பார்வேந்தர்பெருமானும், தக்கபொருட்செலவிட்டுச்சாற்றியவாறவைசெய்தான்,கைக்களிற்றுகிளைபான்றன்கழல்பணிவான்களிகூர்ந்து. *

திருப்புகழுடவனுமந்திகழ்தரச்சேர்த்தனனன்றி,மருப்பொலிகற்பகக்காவின்மலர்கொணர்ந்துதருவேனென்றொருப்படுஞ்சிந்தையின்வலியாலொருதினஞ்சுட்டினனதுதான், பொருப்பிலிடும்விளக்கேபோற்புவியெங்கும்பொலிந்ததனால். (௫௭)

அழுக்காறுமலிசம்பந்தாண்டானுமத்தினத்தி *
லிழுக்காயமொழிக்கஞ்சாதெழிலருணையிடத்தெய்தி *
முழுக்காகங்கொக்கிறகாண்முடியிருப்பதுபோல *
வழுக்காயவஞ்சகத்தான்மனத்தைமறைத்திருந்தானே.

அருணகிரிப்புலவோன்பாலடற்சம்பந்தாண்டான்முன், பொருவரியபகைசெய்துபுகழிழந்தவிதஞ்சொன்

னேன், மருமலிகற்பகமலர்க்கம்மாதவன்போயநுமவ
ன்றன், னுருவமழிந்தது்மினிநானொருசிறிதுபகர்வே
னே. (௫௬)

சம்பந்தாண்டான்விகாதச்சருக்க முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

## பாரிசாதச்சருக்கம்.

பெற்றிமிக்கபிரபுடதேவன்முன்
சொற்றிடும்படிதூயவிண்ணூர்மலர்
பற்றிவந்திடப்பைந்தமிழ்சசோணவெற்
புற்றிருந்தவொருமுனியுன்னினான். (க)

தன்னுடம்பைத்தனித்திருக்கோபுர
மன்னுமேனிலைவைத்தனன்மாண்டதோர்
பொன்னுறழ்ந்தகிளியுடற்புக்கெழுந்
துன்னும்வானகத்தோடினனோடலும். (உ)

கூடவுற்றகுலக்கிளிபற்பல
நீடவேகிநிறைவலியின்மையால்

வாடலெய்திவசிப்பிடத்துற்றன *
பாடன்மிககுணர்பைங்கிளியொன்றுமே. (௩)

மின்னலென்னவிளங்கெழில்வேலினான் *
றன்னருட்பெருககங்கொடுதண்குலாம் *
பொன்னகாகருட்புகுந்ததுபோகுமுன் *
னென்னலன்றெரிந்தானுமையோதலால. (௪)

சென்றுசிற்சிலர்திண்டிறன்மன்னன்முன் *
னின்றுனக்குநெடுவிசும்புற்றபூ *
வின்றுகொண்டுவருதுமென்றேகினேன் *
பொனறுதன்மையடைந்துசொற்பொயத்தனன். (௫)

இன்னதானத்திறந்தனனிச்சொன்மெய் *
யென்னவோதியிறைஞசவிடுத்தன *
னன்னசொல்லரசன்செவிக்கங்கியிற் *
றுன்னவைத்தசலாகையிற்றேய்ந்தது. (௬)

தொண்டுகொண்டுய்ர்தூயவனசொன்னசொற் *
பண்டுபோலப்பலிக்குமென்றெண்ணினேன் *
மண்டுவல்வினைவந்ததுகொல்லெனக் *
கண்டுநொந்திருகண்கலுழ்ந்தானரோ. (௭)

ஆயகாலையிலங்கமணன்புகுந் *
தேயநஞ்சமிவற்கெவர்நல்கினர் *

மாயவஞ்சகன்வைத்திருந்தான்கொலோ *
தூயகோயிற்சொருடக்குறசசெய்தனன். (அ)

பொன்றயங்கும்விஞாரினிற்போம்வலி *
யென்றனக்கிலையென்றிடநாணிஞெ *
னின்றனேகரிகழ்ந்திடஞணிலான் *
குன்றநேர்புயக்கொற்றவவென்னவே. (கூ)

மன்னைநோக்கியுமற்றுளமன்பதை *
தன்னைநாடியுஞ்சாற்றினன்பற்பல *
வனனையன்பனகங்களிப்பெய்தவோ *
வென்னைகாரணமோகுகனெண்ணிலான். (ய)

விரிதிரைப்புனல்வேணியன்கோயிலிற் *
குரியபூசையுஞற்றுகிமித்தமப் *
பெரியவன்றன்பிறங்கெழின்மேனியை *
யெரியிலிட்டனரிப்படியாயபின். (யக)

அங்குதேவரதிசயித்தம்புவி *
தங்குமோர்கிளிதன்னுடலோடுவந் *
திங்குலாவுவதென்னெனத்துன்னிஞர் *
பொங்குசெந்தமிழ்ப்பாடல்பொழிந்ததே. (யஉ)

வேறு.

பாடலின்பயனுணர்ந்துதம்மூரொடு பரிந்துதம்மை

யுங்காக்கு,மாடல்வேலவனடித்தொழும்புடையதென்ற
நிந்தனரயிராணி, கூட்விந்திரன் கொலுவிருந்திடும
வைகுறுகியோதினரன்றேன், வேடம்வேறெடுத்துறு
ந்தவனுமெனவிரகினுணர்ந்துற்றான். (௰௩)

வந்துதெண்டனிட்டுபசரித்தழைத்தலு மலைத்திரள்
வழியாவுஞ், சிந்துவச்சிரந்தரித்தகைமிசைவரச் சிந்
தைமிக்குவப்பாகி, முந்துகாரணஞ்சிறிதுகேட்டணி
மணிமுடித்தலைமிசைவைத்தான், பந்துநேர்முலைச்சசி
முதலணங்கினர்பற்பலர்விழைவுற்றார். (௰௪)

கண்டிதோர்கிளிதானெனக்கருகிடிற்கடும்பிழைவரு
ஞான, பண்டிதன்றனதடியருட்சீரியன்பாவலர்களின்
மிக்கோ, னெண்டிசைக்குமப்புறத்திலுநிறைபுகழிசை
ந்தவனெனவஞ்சி,புண்டிடும்படியமுதமிக்கூட்டியவ்வு
டலுமேம்படச்செய்தார். (௰௫)

கூரிலங்கியகுலிசவேன்மன்னொடு குலவுபைங்கிளி
நாதன், பாரிசாதமென்மலரிலொன்றளித்தெனைப் படி
யினுக்கனுப்பென்று, னேரிலைந்தவத்தருவிலெக்கால
முமிருக்கலாமெனக்கூறக், காரியஞ்சொலி யப்படிப்
பெற்றொருகணத்தின் மீண்டனன்மன்னே. (௰௬)

இந்தமாநிலங்கருதலுந்தன்னுட லிகலவன்புரிதீங்கா
ல், வெந்தவாறுணர்ந்தொருசிறிதழுங்கினன் வினைத்தி

றன்முதலாமற், றெந்தவேதனைத்தொடர்பையுமொழித்
தருளெளிதினிற்றரவல்ல, கந்தநாயகன்சம்மதமீதென
க்கருதியுங்களிகூர்ந்தான். (௰௭)

பெற்றதாற்களிப்படைவதூமேலவர்பெற்றியென்றிடு
மாற்று, லற்றமெய்தியவுவகையோடருணையயடுத்து
வந்தனனவ்வூர், முற்றமாமணங்கமழ்ந்ததாலியாவருமூ
க்குணர்ச்சியின்மூழ்கி, யுற்றதன்மையராயினரப்பொ
ழுதுயர்பிரபுடதேவன். (௰௮)

சீயகாலிரண்டேந்தியவாதனங் கிருக்கிவீற்றிருந்தா
னங், கேயமந்திரியாதியர்சூழ்ந்தனரெழிலவைமிகக்கூ
ட, லாயதஞ்சுகத்துடலினுட்புகுந்தவ னமரருர்மலரீ
தென், றீயவாங்கினனென்கடன்றீர்ந்ததென்றியம்பிடு
மொழிகேட்டான். (௰௯)

ஐயகோவெனவலறினன்வீழ்ந்தன னருணைநாயகன்
பேர்கொண், மெய்யனேர்கிளியுருக்கொடுவந்துளவிய
னினைத்தெழுந்தானின், செய்யமேனிபைபெண்ணிடத்
தளித்திலைசிகரியின்மிசைவைத்தாய், பொய்யர்சொறப
டியெரியிடற்கிசைந்தனன்பொறுத்திடென்றிறைஞ்சுற
றான். (௨௰)

வந்துகூறினர்தமைக்கொணர்ந்தமக்கதன்வகைசொ
ஞரெவரென்ன, வெந்துகேட்டனன்வெருட்சியாலுளா

த்தனர்விரைந்துவாட்படையேந்தி, புந்திநீப்பொறியுடன்விழித்தவன்றனையொறுக்கநாடினனகண்டு, சிந்துரத்தனிவாய்திறந்தஞ்சுகத்திருவுருவினன்சொலவான்.

என்றனக்கதுமிதுவுமந்நியமதிலிதன்சுவையெளிதாகும், குன்றமன்னிடத்ததனுடன்செலிற்பல குழுவுடன்றொழல்வேண்டு,மென்றகைத்திருப்பெறுமிதோடேகிடலவியன்கரத்துறலாகுஞ, சென்றவூரமிழ்தயின்றதாலிதனிடஞ்சிறிதுமெய்ப்பணுகாது. (௨௨)

இதுவுமிவ்வுடலினமுநலனுணவலா லீனமுற்றவையுண்ணாப், புதுமைதோய்வனவதுவுமுன்னாட்சிலபுசிக்கொணாதனவுண்ட,தெதுவுமீசுரச்செயலெனிலிச்செயலிகலவன்றனதாமோ, மதுவுநாணுறுஞ்சுவைக்கவியிந்தவாய்வழங்கிடிற்கசப்பாமோ. (௨௩)

நிதமுமெத்தனைமானிடயாக்கைகளிலத்தினில்விழுகின்ற, ததனைவிட்டிதையெடுத்தநான்விருப்புறிலவற்றிலொன்றடையேனோ, விதனமுற்றுளகிளிக்குழாமுவப்புறமேவுதும்விறன்மிக்காய், கதமுறேலெனக்கழறினனுடற்றொனிகாட்டியும்பறந்தானே. (௨௪)

மன்னன்றன்றலைவிதியினைப்பழித்தனன்வயிறெரிந்தனன்வனுசங், துன்னவாழ்கொடுஞ்சமணனைவசைபடச்

சொல்வதிற்றுணிவுற்று, னன்னதன்மையேயகிலமுறற
டைந்ததவ்வமணனெனுசமையானு, யுன்னருந்திறலுக்
கிரகாளியிற்குரியபூசனைசெய்தான். (உரு)

வேந்தன்றன்குடிகெடுக்கவோவருணையின் வியனழி
த்திடத்தானோ, சாந்தமாரதமிழ்ககிளியினை யினதகொ
டுதடியவோதனையேசு, மாந்தரியாளையும்விழுஙகவோ
காளியைவரவழைத்திடநாடிப், போந்தபூசையிறசெய
த்தகாதனசிலபுரியவுந்துணிவுற்றுன். (உசு)

சருப்புசிப்பவர்சேனைகாவலனொருசத்துருசங்காரத்
திருப்புகழக்கவியம்பிகைக்குளையெனச் செழுந்தமிழ
கிளிதன்பால், விருப்புடன்சொலக் கேட்டதுன்றனக்
கலால்விளம்பிடேனெனவேலா, யிருப்புளாத்தனனவ
ண்மகனிவனெனவியம்பியதந்நாளில். (உஎ)

யாளிமீதிவர்ந்தாயிரந்தலையிரண்டாயிரங்கரத்தோடு
வாளிலங்கிய படைபல தாங்கியோர மலையெனவளர்ந்
தோங்கிக், காளிவந்தனளதட்டினள்பணிந்திலன்கடுக்
கெனத்திடுக்குற்றுன், றேளினுங்கொடுங்குணத்தனு
ஞ்சமணன்மேற்சினந்தடித்துயிருண்டாள். (உஅ)

கண்ணிரண்டுநாவொடுமிகப்பிதுங்கினகருஙகுருதி
யின்சோரி, மணணிலோடிடமலசலங்கழிந்தனவநுசக

த்தொடுமொண்டான், புண்ணியத்தினர்நினைக்கரும்வெறிப்புனல்புலைத்தசையிடும்பூசை, பண்ணிடும்பலரிவ்வணமடிவதுபாரினில்வழக்காமால். (௨௯)

அன்றுகண்டவர்கேட்டவரியாவருமவுணராதியபொல்லார், பொன்றுநாளையிலிருந்தவராமெனப்புகலருநகளிப்புற்றா, நன்றளாக்கிடையூறுகள்விளைத்திடநாடுநாக்கதுதான்வர, தொன்றுமென்பதற்கிதுகரியாகுமென்றுரைத்துணர்ந்தனர்சில்லோர். (௩௰)

பேட்டொலனமனையவர்விரும்புதோட்பிரபுடமகராசன், கேட்டுமாமகிழ்வெய்தியெண்ணறுபலகிரிதொறுநடமாடும், தாட்டுணைககுகன்முதலியவானவர்தமக்கெலாமபிடேகஞ், சூட்டுமாலைநிவேதனமாதியதொகுத்திறைஞ்சினனன்றே. (௩௧)

வந்துகோபுரவாயிலினின்றுமுன்வானகமலரொன்றுதந்துபோயினகிளியினையதனது தண்ணருண்மிகையாற்கண், பிந்துவன்பகையொழிந்தலாறுரைத்தனனுயிர்த்திரளினுக்கெல்லா,முந்துநாள்விதிப்படிநடந்திடுமெனமொழிந்தவனுடன்வந்த. (௩௨)

பாவலன்றனைப்பார்த்துமைமகனெனப்பகர்ந்ததோர்தவிசொல்லிற், றுவல்கொண்டெழுதினனினிவந்துவர்

தனைந்தபாட்டெடூஉதென்ற, தேவனின்படிநடப்பதிற்பி
ழைபடேனெனவிறைஞ்சினனந்தக், காவலன்சொலும்
பெற்றனன்சிறிதுநாட்கழிந்ததிவ்வணமாதோ. (௧௩)

கொற்றவன்றனதருந்தவபயனெனக்குலவுபாலகன்
றன்பா, லுற்றதன்னரசுரிமையைக்கொடுத்துவிண்ணூர்
புகுந்தனனன்னோன், மற்றடப்புயவலிமுதற்பகர்நலமு
ருவிமாதவத்தோர்க்கு, கற்றவாகருமோருயிரெனவி
ளங்கினன்கலிவெருண்டயர்ந்தானே. (௧௪)

மெய்ப்புகழ்க்கடல்விளைக்குமப்புரவலன்விரிகடலோ
ரேழு, மொப்புறாக்கருந்திருப்புகழாதியவுயாதமிழ்க்க
விகோடி,கெப்புமேலவன்கிளியுருக்கொடுதிகழுசிகரியி
ற்றினம்போய்வர், தெய்ப்புறுமையிற்றுதையிற்சிரிய
னெனும்பெயர்புனைந்தானே. (௧௫)

தேரிலங்கெழிற்றெருவளத்தருணையூர்ச்சிவன்பெயர்
புனைந்துள்ளான், பாரிசாதமென்மலர்கொணர்ந்தது மு
தறபகைசெடல்பார்வேந்தன், சீரியந்தவிட்டுரலவன்
மகன்றிறல்செப்பினமினியன்னோன், சூரியறசெழுமப
[illegible]ய்க்கிளிகளிற்கூடிவாழ்ந்தமைசொல்வாம். (௧௬)

பாரிசாதச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

## கிளிவாழ்க்கைச்சருக்கம்.

குலவுசீர்த்திருவருணைகோபுரத் *
திலகுபைங்கிளியினங்கண்டின்புற *
நிலவுமொன்றிறந்துயிர்த்துநேயமார் *
பலவுமணுகுறப்பறந்துபோயபின். (௧)

அனறதோடுசென்றயர்ந்துமீண்டவை *
நின்றமற்றவையோடுநெஞ்சழிந *
தொன்றருந்துதலின்றியோர்தினங் *
கன்றலுற்றபின்காணப்பெற்றன. (௨)

கண்டுகிக்கிகீககவென்றசொல் *
விண்டுசூழ்ந்தனவேலன்றன்னடித் *
தொண்டுகொண்டவன்சூழ்ச்சியான்மிகப் *
பண்டுவாழ்ந்ததிற்பரிவுகாட்டினான். (௩)

மன்னனாகியாவலிதில்வந்துவந் *
தன்னம்பாற்குழம்பனையவுண்டிதா *
மின்னறீர்ந்துபுநிமித்தமேறவைத் *
தென்னதேற்றதென்றியம்புவார்சிலர். (௪)

சுற்றமோடுதானருந்திற்றாயவா *
பெறறநன்னுமகள்பேசககேட்டுவந *
தறறமஙகவர்தமைமெயலாமறிந *
துற்றதோர்கிளியதனையோர்கிலார். (௫)

துஙகவானமலர்சூடுஞ்சென்னியோன் *
புங்கமாரகவியெழுதும்புண்ணியன *
றஙகளோடுசொற்சாற்றும்போதுவர் *
தஙகண்ஞாலமுறறவர்களாரவமாய. (௬)

ஐயநீஙகுவரடுகதுச்சிற்சில *
செய்யவாயக்கிளிநெருங்கிற்சிங்கையின் *
மையல்கூர்வருண்மருவுவான்றனைப் *
பையநாடுறும்பருவமின்மையால. (௭)

தூலகிட்டியிறசுழன்றிடாதருட் *
பாலதாமனம்பதியும்வேட்கையாற் *
காலநோக்கமாதியகண்டோர்சிலர் *
சாலவீதெனவுணர்ந்துசாற்றுவார். (௮)

சித்ராதியகணைத்துட்சிற்சில *
ருத்தமக்குகனருளிலுற்றதோர் *
பக்கன்வாழகிளிப்பான்மைகாணுற *
வித்தகத்திருவருணைமேவுவார். (௯)

இன்னதன்மைகளளவிலாதன
துன்னவாழ்பவற்குழுமவ்வினஞ்
சொன்னதோர்சுகபெயர்க்குத்தக்கசீ
மன்னலாலுயர்மாண்புதோய்ந்தது. (௰)

வேறுவேறுதாய்விரும்பிப்பெற்றுள
நூறுநூறெனநுவல்வயானையு
மாறுமாமுகனருளையேமிகக்
கூறுமொன்றுதன்பார்ப்பிறகொண்டது. (௰க)

செந்தமிழ்க்கிளியுடம்பிற்சேர்ந்தினி
தந்தநாளையிலிருந்தவாருயிர்ப்
பந்தமேவியும்பசியமாமயிற்
கந்தவேண்மலர்க்கழல்கணுமால. (௰உ)

அரியசந்தவாக்கிபன்வாழ்தலுக்
குரியமேனியிலுற்றதோருயிர
பெரியாவேணவிசீர்பெற்றதென்றிடிற்
சரியன்றென்பவர்தமக்குப்பாரமே. (௰௩)

பேடுபோர்ப்புறுற்பிறங்குபல்குழாத்
தூடுமேம்படவுறைந்ததோர்கிளிக்
கூடுவாய்த்திடக்கொடுத்துக்காத்ததோர்
வேடுவன்செயல்விரிக்கொண்ணுதரோ. (௰௪)

வேறு.

கந்தரநுபூதியலங்காரமுதலாய
பைந்தமிழநறுந்தொடையல்பற்பலவனைந்து
செந்தகையவாய்கொடுவேளாந்தசிலபாட
லந்தநகரிற்சிலர்கொடார்வமுறவிட்டான். (௰௫)

நல்லவருடன்பழகின்ஞானமொடுகல்வி
யில்லவருமிக்கநலமெய்திடுவரென்னுஞ
சொல்லருணையின்சிகரிதோய்தருசுகங்கட
கலலறமுனிந்தகிளியானிசமதாகி. (௰௬)

மானிடவுணர்ச்சியில்லயங்குமகிழவெய்திக்
கானிடமலைந்துறுகலக்கமுழுதற்று
வானிட்மிருக்குமவர்வாழ்வையும்வெறுக்குங்
கோனிடமியைந்துளகுணஞ்சிலபொருந்தி. (௰௭)

பெற்றவைநினைத்துமகிழ்பேரறிவின்மூழ்கி
யுற்றனவனாளிலவையொத்தவுருவத்தோர்
நறறவனயிறவடைகொளுயகன்வசிக்குங்
கொற்றமலையிற்குடிகொளும்படிகுறித்தான். (௰௮)

அசசிகரியாலதையடுத்தசிகரிக்கு
நச்சியகிளிப்பெயாநவின்றிடமிருக்கும்
பச்சிறகுகொள்ளுமவைபற்பலநெருங்க
மெய்ச்சிவனுறுங்கிரியின்மேற்றிசையிலுற்றான். (௰௯)

காதலுறும்வாழ்வுதவுகந்தனுறைகந்த *
மாதனநெடுங்கிரியின்மன்னியதவடடின் *
மீதணுகியாகுலவும்வித்தகர்களெல்லா *
நாதனெனவொப்பவொருஞானவநுபூதி. (௨௰)

வேறு.

பாடினன்கிளியின்செஞ்சொற் பன்னிருசெவிகேகோ
ன்கேட்டு, வாடிடேலவாவாவென்று வரவழைத்தொரு
வன்சேவ, னீடியபுயதகினோராங்கழவலதோளிலவை
த்தா, னாடினர்புலவர்கையா லணிமலாமழையும பெய
தார். (௨௧)

அன்றவனருணையூரிலவதரித்திடுமந்நாளே, யென்
றவேள்கிழமைமட்டி லிரண்டதாமெனவுஞ் சொன்னா,
னன்றதுமாறிததோன்றனாணிலத்தியலபேயாமா, லொ
ன்றலாற்பிறிதொன்றில்லையுரியசீர்செயவல்லார்க்கே. *

அக்கிளியாயிலவேள்பாலுமமரர்கோன்மகடன்பாலு *
மூக்கிரக்குறவாகானத்தொருமடககொடிகன்பாலு *
மிக்கினுமினியசெஞ்சொல்லியமயிமிக்குவகையீந்து *
திக்கிளமறியுமுண்மைத்திருப்புகழ்படைத்ததம்மா. *

அப்புறநடந்தகாதையதிற்சிறிதறிந்துமற்றுலு *
மிப்புராணத்திருனாயேனியம்பிடுமியலபின்பாறறன் *

றெப்புலவனுககமமேன்மையிசையுமோவறிநின்றிலலே
ன்,முப்புரமெரித்தாரீன்றமுருகவேளறியுமன்றே. (உச)

யானிதிறபகாந்தவாற்றிற் கிசைந்திடாவிதமுனுால
லோா. நானிலத்தனைப்டாதுண்டுரலநிகழுறுகோாநத
ன், கானிடககுறததிகோன்றன்கழல்பணிந்துயந்தவா
றறை,வானின்மென்மலாகொண்டுற்றவண்மையைமறு
ததிடாரோ, (உரு)

மருமலரிதழியாற்குமனேவியையவழங்குரோா,லொருபெ
ருநதாதையாகியுலபபருமபுகழசசீர்தோய்நத, வருணா
வலலாளன்செய்த வணிநெடுஞ்சிகரிக்காவன், முருக
வேளருளாலிநதமுதுகதைமுடிநததன்றே. (உகூ)

பலபலசிகரியோங்கும்படியிடத்தருணையூர், னிலவு
மொனறினுககிம்மேனமை நிகழ்ந்தவாறென்னென்றெ
ண ஹுமப, புலவருமபிறருநதேறிப்புகன்றுவப்படைதல
வேண்டி, யுலகினிற்பழைமயோாதம்மா லுணர்ந்தவாறு
ணாக்கலுற்றும். (உஎ)

கிளிவாழக்கைச்சருக்க முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக் கடவுடுணை

# கோபுரத்துச்சருக்கம்.

ஆரணிந்தவிர்சடைத்தம்பிரான் *
சீரணிந்தசெழுந்தழல்வெற்பதா *
மூரணிந்தரசாண்டவருடொரு *
காரணிந்தகைக்காரன்வல்லாளனே. (க)

தருமநீதித்தகைமுழுதுற்றவ *
னிருபடந்தையாக்கேற்றமனுளன்வேன் *
மருமவீரமகாரதன்வண்டுமுழாய்க் *
கருமலேக்கிணையாகியகாட்சியான். (உ)

மன்னர்மன்னனெனப்பெயர்வாயந்துளான் *
சின்னவெண்பிறைச்சென்னியன்பொன்னடி *
யுன்னலேதவமென்னுமுணர்ச்சியா *
னின்னலின்றியிருந்தரசாளுநாள். (ந)

பாலன்வேண்டும்பருவாலுற்றுளனு *
சாலவாடித்தளர்ந்தனன்சந்ததனு *
சீலவேதியர்செப்பியவாறெலா *
ஞாலமீதுநடத்தியுநாணினன். (ச)

சரதமாநிறைத்தையலாதாமுநல் *
விரதமுறறுமெலிநதுவெதும்பின *
னரணமனைக்கழகாமொருமைநதனைக *
கரகநாளமுகன்கைகொடுசெய்திலான். (௫)

வேநதினத்திலுண்மிகுகவன்றன்னிடம் *
வாயநதிடும்பலவகைபபொருளியாவையு *
மேநதியேறபவர்ககில்லையென்றோதிடா *
நிநதிடததுணிநதானெழில்வாயிலில. (௬)

ஈகைகாட்டுமியறபறைமோதுவித் *
தோகையோடுமொருவொடிக்கட்டின *
னகையாலுளவாதுலரியாவரும *
வாகைபெறறுமகிழசசியினமூழகினர். (௭)

அநதநாளிலவன்பொருட்குன்றிடா *
துநதவைத்தனமொண்மழுசசெங்கையார் *
தநதவேழநதனைநிகர்மன்னவ *
னெநதவேளையுமேறபவையீநதனன். (௮)

மேலுமேலும்வியன்றிருமிஞ்சுத *
லாலுநொநதனனபிழைதன்முலைப் *
பாலுண்வாய்சசிறுபாலகனின்மையிற் *
சாலும்வாழவைத்தணநதிடநாடியே. (௯)

வந்திரப்பவரின்மையினமனைவ *
னெந்திருந்தனனாலிடையாளிடத் . *
தந்திவணனைரருண்மலிந்தாடுவான *
சிந்தியாவொருசிறுபகொளனுவார். ௰)

திரைந்தமேனியுஞ்செந்நிறத்தானையும் *
வரைந்தபுத்தகமவாயந்துளசட்கமு *
மிரைந்தமூசசுமிளைப்புமவெண்பிணாநீர் *
கரைந்தகண்ணுங்கரத்தொருகோலுமாய. (௰௧)

நீறணிந்துநெடுவேடத்தக்கமு *
மீறமாயிலவிளக்கிவெயிறமரும் *
பீறலாகுடைநீழலிற்பேசரும *
வீறனைந்துளவீதியின்மேவினன். (௰௨)

மங்குலபோலவழங்கும்வலலாளமா *
லெங்குளாலவனீகைவிரைந்துளே *
னங்குகொண்டேனையாவிடுவானெனப் *
பொங்குதுன்பினாபோறபுகன்றனரோ. (௰௩)

அன்னமாற்றமறைதலுமங்குளார் *
மன்னர்மனனவன்வாழபெருமாளிகை *
முன்னமவிட்டுமொழிந்தனருட்புகுந *
தின்னல்கூபிபிரகதமுன்னேசில்கோன். ௰௪)

கணடுவந *
கொண்டு *
றெண்டு *
யுணடுமெ மரு)

மன்னன் றுவத
னமலாசசி பொ
ன்றுளதெ ணண
ம்புரிவாபே மியா,
னினைனூ ாலறி
யாவிருதா (மசு)

வலலாள ல்வழ
ஙகசசோமப, ன்லலாதமயாருமளன்யாமனசெ
யவேனெனறுனவ்விறைவனெங்கு, மெல்லார்க்குமெளி
திலெயதத்தக்கதேயென்னளவுமிறும்பூகாயிற், றல்லாம
லிலலையென்றுனரசனினனேயளிக்குதுநீயறைதியென்
றுன். (மஎ)

ஈதுமெனச்சொன்னமொழிவினவியந்தக்கிழமுனிவ
னியாதோவென்ன, நீதுயருற்றிடவேண்டாமொருமட
வாளின்பாலஙினைத்தேனோர்நாட், போதுமென்றுனுட

னையனொற்றார்களையனுப்பியவ்வூர்ப் பொதுமின்னாருட், சூதுறழுங்கொங்கைநல்லார்களிற்றனித்தோரனைவரையுந்தொகுக்கச்சொன்னான். (௰௮)

பருவமடமங்கைநல்லார்பலரையந்தமுனிவரன்கண் பார்க்கச்செய்வித், தொருமகளைக்கொடுக்கமன்னனுன்னுமுன்னமுயிர்த்தொகையினுள்ளந்தோறு, மருவுமவனவரவர்க்குந்தக்கவாறுத்தனித்தனிபோய்மாடைநல்கி, யிருவருமாயமளிமிசையத்தெருவின்மனைதோறுமிருந்தான்மன்னோ. (௰௯)

அவ்விறைவன்றனதருளாற்பெருவிரலிற்பால்சுரகக வருந்தியுயர்ந்த, செவ்வியமாமுனிவனதுசீடர்களிலொருவனிடைச்சேரியிற்றோ, ரெவ்வியமங்கையர்பலர்க்குமொவ்வொருவனாவிளங்கலுண்மையென்றா, லிவ்விதமாங்கியற்றியதோரவியனாமென் றியாவர்சொலவாரிகத்தினமாதோ. (௨௰)

போயவொற்றார்பலரும்வந்துகணிகையாதம்மனைதோறும்போரோறன்னார், மேயவிதம்புகலக்கேட்டிகல்வேந்தன்றிடுக்கமுற்றுவேறும்பல்வா, றாயவிதங்கருதியொன்றுநீதியினுக்கிசைந்ததன்றாலகற்றிதன்றோ, ணேயமுற்றா ரிருவர்களிவிளையாடன்னொழிற்பொலிவினைவுவந்து. (௨௧)

அரண்மனையுட்புகுந்தந்தப்புரத்தேகியவளருகிலணுகியின்றென், விரதபங்கம்வாராமற்காப்பதுன்றன் கடனென்றான்மெல்லிநல்லாள், புரவலநின்னுத்தாரம்போனடக்கையென்விரதம்புகலென்றாளவ், வரமுனிவன்கருத்துமிவன்முயன்றவிதமத்தனையும் வகுத்துசசொன்னான். (உ௨)

நின்பொருளாமென்றனக்கோசுதந்தரமின்றுன்னெறியினிற்பேனென்று, என்பொடுமின்றிரவளவிலம்முனிவன்றனைசசேரென்றறைநதான்சென்றான், மின்பொருசிற்றிடைப்பாவையெள்ளளவுமனங்கோடாவிரதியாகிப்,பொனபொதிபுமணிப்பணிபூண்டரங்குமலங்கரித்திருநதாள்புனையில்பண்பால. (உ௩)

பல்லனுவிற்கனையாகு மருணையுண்ணாமுலையையிடப்பாகம்வைத்த, வல்லவர்தாம்வல்லாளன்மனைவியினைச்சேர்வார்போன்மாறுவேடம், புலவரும்பெருங்கொடுமைசகியானெத்தேழுபசைசபுரவித்தேரு, செல்லவன்றான்மேருவிற்குவடபுறததின் மறைந்துவிரைந்தேகினானே. (உ௪)

அருணநெடுங்கிரியாகியரியயன்றேடரிதாயவமலாகாமம், னொருவன்மனைவியைப்புணர்வாராமாகிலதைப்பிறரபாலுணாத்துத்தான்முன், குருமனைவிதனைசசேர்ந்த

கோதொருவாறொழிப்பதெண்ணிக்கொண்டான்போல
த், திருமலிதனை பனிக்கதிராயிரமுடையபதிகுணக்கு
த்திசையிலவந்தான். (உ௫)

தண்சபலபலர்குவிந்துர்டலமலார்துவண்டுசிலதய
ங்கவானத், தொண்குலவுருடுத்தோற்றமுனைதொறுங்க
னறினங்கதறவொழுகுதிம்பால, வண்கொணமடியசை
த்தாக்கடெருவிலவரச சிறுவரசைவாய்ந்த தோளோ
டெண்கிளர்நெருசீனராகி யொதுஙசவருயானை கக
ண்டிகலவேன்மன்னன். (உ௬)

காமவெறிவிளைசியுடல்பனிப்பவிதழூலர்ந்து செமமை
கடைக்கண்சாரத,தாமதமேனரசனெங்கென்றடிக்கடிகே
ட்டிருந்தசள்வர்தம்மைப்போற்றிப், பாமரர்போற்கை
யிலவெண்ணெயிருக்க நெய்க்காளனுப்பிநொந்தபழுது
தீர்ந்தே, னிமகிழவுற்றெழுந்தருளென் றழைத்துவந்த
வ்வரங்கதனுண்ணெறியோடுய்த்தா. (உ௭)

அணங்கனையாடனைநோக்கியிவர்க்கானபணிமுழுது
மனையிற்செய்து, பிணங்கலின்றியின்பநலம்பெறுக்கென்
றுனதற்குளவர்பெயர்தியென்றா, கணந்தறுகாதப்புற
த்திறகதவடைதது ப்போய்த்தனதுகைவாளேந்தி, பண
ங்கமழமாலிகைததிண்டோள் வலலாளன் காதிருந்தா
ன்மகிழசசிகூர்ந்து. (உ௮)

மலர்விரித்தபஞ்சணையில்வீற்றிருந்தமிழமுனிவரம
ருவுவாரொன், றிலகுபசுந்தோகையன்னாளனைத்தவி
னபுறக்காளிடடெண்ணிலாத, பலதரஞ்சேர்ந்துளளா
ளபோன்முகமலர்சசியுடனனுங்கிப்பக்கத்துற்றாள், கல
கமதற்கஞ்சினர்போன்றிருந்ததுபோய் வெயர்ததவசங
காட்டலுற்றார். (௨௯)

ஒருநொடிக்கோர்விதநோய்கொண்டுழல்வரிற்பரத
வித்தரொள்வேறகண்ணு, ளருவருபபோர்சிறிதுமின்
றியாதரித்தாளவிரதமுடிவாகாவாற்று, லுருகியங்கை
விரலைநெரித்தயர்ந்தாளககணஞ்சேவ லொலிகேட்டெ
னறாழ, வருமெனத்தேர்ந்தணிமுலைச்சோடவர்மாரபிற்
றினைப்புறப்போய்வலிதிறமேற்றேய்ந்தாள். (௩௰)

தழுவுகலுழன்றுளோர்கொடியிடமூன்றுருக்காட்
டுந்தம்பிரானை, ரழுமதலையுருவானுரவளுமுலைப்பால்சு
ரந்தீன்றவளேபோன்று, விழுமியசீர்க்கதவுதிறந்தாளு
டன்வ்வேந்துவகைவியப்போடெய்திப், பழுதிலளாமு
தனமனைவியொடுதானுமெடுத்தணைத்துட்பரிவுதீர்ந்து.*

மூவர்களுமடிக்கடிகைம்மாறிமுகந்தார்கடிகைமூன்
றேழுக்கா, லாவதன்முன்னகிலமுண்டோனறிவரியது
ணைத்தாளுமலர்ந்தகஞ்சப், பூவருவான் கண்டறியாப்

பொன்முடியும்பார்த்துரியபுரைதீர்ந்துய்ந்தார்,தேவர்பி
ரான்சிசுவடிவங்காணவருவான்போலத்திகழ்ந்தான்வெ
ய்யோன். (௯௨)

மந்திரியாதியர்தாமுந்திருவருணையூரின்மற்றுமவாழ்
சில்லோரும், வந்திறைவனருட்கூத்தென்றுணராமறப
லவாறுமகிழ்ந்துசொன்னார்,முந்திவந்தகிழமுனிவனெ
ங்கெனக்கேட்டிலரவளுமொழிந்திலாளெத, தந்திரமு
ந்தெரியுமந்தக குழவியவர் மனவாஞ்சை தழையசசெ
ய்து. (௯௯)

வேறு.

மாயமின்னெனவிண்ணிடைமறைந்துமறைந்து *
போயபோதவர்வருந்துமுன்போர்விடைப்பரியிற *
றூயவாணகைசசுரிகுழற்றேகையோர்பாக *
மேயசீர்முதற்றெரிதரவிளங்கியதன்றே. (௯௪)

வானுளாரனைவருமிகமலர்மழைபொழிந்தார் *
கோனுமங்குளகுழுவுடனுவகைமேற்கொண்டு *
மானுறுங்கரத்தண்ணலைத்துதியொடுவணங்கி *
யானுமென்குலத்தியாவருமுய்ந்தனமென்றான். (௯௫)

பொன்றுதீமையில்புனிதர்தாம்புரவலனறன்பா *
னன்றுநின்றவமகிழ்ந்தனமையுறேனுமே *

யின்றுநின்மகவரியினம்வேணடுமொமெழுமசே ✲
யொனறுநல்கினுமவருடநாருயபினமௌழியும். (கசு)

உலகமுள்ளமட்டுன்மகவெனமெனமையுரைக்கத் ✲
திலமளாவியநீரிறைக்குதுமினிதகேகம ✲
விலகுமாறெவண்வேணடுதியுரையெனவினவக் ✲
குலவுபோரிடைவிடுத்தலேநலமெனக்குறித்தேன்.௬எ

என்றுகூறினனீநதனமெனறவரிருவ ✲
ரனறுதேடியவரையினுள்ளுருக்கரநகன்றார் ✲
மென்றுகிறபிடிநிகர்மனேவியமொடுமேவநத ✲
னின்றுபெறறபேறென்னெனவியநதினிதிருந்தான். ✲

தன்னையாண்டவரிலிங்கமாவுருக்கொடுதங்கு, முன்னே
யாலயத்தினைவளைநதொருமதிண்முடிப்பித், தென்னே
வேண்டுபொறசிகரிகீழ்த்திசையிலொன்றியற்றிப், பின்
னைமூன்றுமற்றுளதிசைதொறுமுறப்பேணி. (௬௯)

குணகதிலுள்ள்பொற்கோபுரமுகப்பினிற்கோதின ✲
மணக்கடாமுமிழ்வாரணமுகவனைவஞ்சர் ✲
நிணக்குழம்பணிநெடியவேற்குமரனைநிறுவிப் ✲
பிணக்கொள்ளளவின்றிநன்னெறியெலாம்பெருக்கி,

வாழுநாளையின்மகிமைசாலகயிலையின்மருவுர் ✲
தாழும்வார்சடைத்தம்பிரானருண்மலிதகையா ✲

லாழுமெய்யுணர்வுடையவல்லாளனையான்றேன் *
வீழுமவாழவளித்தருகில்வைத்துவப்புறவிழைநதார. *

அன்னபாங்கினையறபபெருநதேவதையறிவுற *
றுன்னருநதிறலொடடாதஙகோணிடதொணறிச *
சின்னமிக்குறுமவனபடைப்பெருக்கறசசீறி *
யின்னவாறெனவிரிததிடறகரியபோரியறறி. (சஉ)

மகரராசியிறருரியன்றேய்தருமதிய *
ணிகரில்பூசநாளவனுடறசுமையறநீக்கி [ற
யிகல்செயவீரர்தஞ்சுவர்க்கவாழவனைத்தையு மிமைப்பி
ககனமேவழியெனககொடுவிவரமாககாட்டி. (சங)

இந்திரன்றழலாதியரெண்மருமபிறரு *
நநதியமபெருமான்மொழிநவினறிடப்பெறறு *
வநதிறைஞசிடக்கிபிமைமால்வளாமிசைவயஙகுந *
தநதியீருரியான்றிருமுனபிலுய்த்ததரோ. (சச)

களததின்மன்னவன்மடிநதிடல்கேட்டவன்காத *
லுளத்திலுளளவரிருவருமுடலவிடுதததறல் *
வளத்ததாகுமவவளையிலவநதவனுடன்வாய்நதா *
ரளப்பிலார்வமுறறவொருமுவருமங்கு. (சரு)

கமலைகோன்மலர்க்கண்ணணிகழறெழககண்டு *
விமலர்தந்தையுந்தாயருமாமெனவெங்கி *

யமராதியரறியவப்போழ்துநன்கறைந்து *
தமதுபாங்கரிலிடமமைத்தருளினர்தயையால. (௬௬)

அன்றுதொட்டருணைபுரியூரவரண்ணேன் *
பொன்றுநாள்வரிலீசனையவன்மருபுகலவ *
னென்றுசொற்றதற்கியைந்தநற்றிருவிழாவியற்றிக் *
குன்றுறழ்ந்தபொற்சிகரியிற்குலவிளக்கிடுவோர். (௬௭)

அந்தமன்னவன்றவமெலாந்திரண்டுருவாகி *
வந்தகீழ்த்திசைக்கோபுரவாயிலின்வடபாற் *
கந்தவேள்பெருங்கருணையினாலொருகவினான் *
சந்தமாரிபெய்முகிலெனத்தோன்றியதகையால. (௬௮)

அதனிலொன்றியபெரும்புகழளப்பருமனைத்து *
மிதனிலோதியகதைகளுமஃதலாவில்லைப் *
புதனைநேர்கவிப்புலவர்பற்பலர்துதிபுனைந்து *
மதனைவென்றசெவ்வேளரங்கினைத்தொழுவையங்கும். ௬௯

செச்சைகூதளங்கடம்பணிபுயத்தொருசேய்தன் *
பச்சையஞ்சுகமுய்ந்தமைவினவலாற்படிறே *
னிச்சைகொண்டதக்கோபுரமாதலினியற்றுங் *
கச்சைகுழனைக்காவலன்புகழ்கழறினனே. (௭௰)

முன்னைநாட்புகழ்த்தொகுதியிற்சிறிதிவண்மொழிந்தே
ன், பின்னையுள்ளனமுடிந்திலவாதலிற்பேசே,னென்னை
யும்பொருளாமெனக்கொண்டதவ்வியல்பு, தன்னையார்
சொலப்புரியுமோயான்செயுந்தவமே. (ருக)

வேறு.

## சந்தக்கவிகள்.

கருணையில்கொடியவர்மனையினுமலைவுறு கவலைப்பா
ழ்வினைநோய், மருவியகவிஞர்களணுகினுமவருளமகி
ழச்சீர்தருமான், முருகவிழிதழியுமதியமுமணிசடை
முதல்வெற்பாகியதா, லருள்வளமொழிபொருள்வள
மலிதருதிருவருணைக்கோபுரமே. (ருஉ)

நாரணனுன்முகனுதியர்வீழ்பத நளினத்தார்மகிழ்கூர்
வாரணமாமுகன்வேலணிதோளினன் வளர்தற்கோரிட
மா, மாரணநோயொடுசூழ்பவமாறிடும்வழியிற்போமவ
ரா, லாரணமாகமமோவிடுசீர்திக ழருணைக்கோபுரமே.

சித்தத்துத்தமபத்திப்பொற்புறு திறல்பெற்றுசிலரா
முத்தர்க்குச்சகசத்திற்சொற்பொருண் முழுதிட்டாள்
வதுவே, மத்தப்புட்பமுடிச்சித்தற்குளமகிழ்பொற்பா
ர்தனிவே, லத்தத்துக்குகனிச்சைக்குட்படு மருணைக்
கோபுரமே. (ருச)

சந்தமுதிர்ந்தசெழுந்தமிழின்சுவைதனினட்பார்புல
வோர், கந்தனையஞ்சுகமொன்றினுடன்றுதி கழறற்கோ
ர்துணையே, சிந்தமுனிந்துநெடுவெங்கிரியின்புடைதிரிதற்
றீரரசோ, டந்தராவந்துபுகழ்ந்துதினந்தொழுமருணை
க்கோபுரமே. (௫௫)

மான்றனைக்கையிலேந்துசிற்பரர் மகிழ் கறபாருமை
யா, ளீன்றபுத்திரர்வாழ்ந்திடத்தகுமிருபொற்கோயில
தே, யேனறபத்தியின்மூண்டெழுத்தமிழியல்பைத்தேறு
நர்பா, லான்றசித்திகள்வாய்ந்திடச்செயு மருணைக்கோ
புரமே. (௫௬)

நீக்கமின்றியவேற்றுரந்தர னெறியைப்பேணுதலே,
மோக்கமென்றுணர் தீர்க்கநெஞ்சுறு முனிவர்க்காதர
மே, பாககளஞ்சியமாத்திகழ்நதிடுபலர்சொற்சூடுதலா
லாக்கமிஞ்சிய கீர்த்திகொண்டொளி ரருணைக்கோபுர'
மே. (௫௭)

டன்னகர்வாணருமுன்னிமுறைஞளபழுதற்றாகமநூல்,
சொன்னமெய்வீடுறுசெம்மலையோடொருதுணையிற்கா
ணுமகே, கன்னல்வில்வேடனதண்ணனுநீடியகருணை
த்தாதையுமா, மன்னமுமேனமுமுன்னமராடியவருணை
க்கோபுரமே. (௫௮)

பையரவேவிகரல்குன்மினூமயல்படரத்தாழ்பவரா, வையகமீதுழல்பொய்யனையாளவும்வருநற்றேவினதே, மெய்யறிவால்வினைகொய்தொருசாருசெய் வியனெப்பேசுநர்மே, லையமுறுவருள்செய்திடநீடியவருணைக்கோபுரமே. (௫௯)

முகிலபொதிசிரகொடுமகபதியாயணிமுதிரசொற்பாடல்களா, லெகினனுமாய்மலர்மகளுறலாலரியினையொப்பாகிடுமா, மகிமிசையாடிடுமயிலிவாசேவகனருளபெற்றோர்புடையா, லகிலமெலாநுவலபெருமையதாகியவருணைக்கோபுரமே. (௬௰)

பொககமிலன்புபெருக்கியதொண்டர்கள்புதுமைச்சீர்பெறலா, லிக்கணியுங்கைமதப்பயல்கும்பிடுமியலபிற்காமுறையே, தக்கன்மகளுசிதையக்குதிகொண்டொருதருமப்பேதையைவா, ளக்கரவம்புனைசித்தன்மணஞ்செயுமருணைக்கோபுரமே. (௬௧)

வேண்டனமுறறருள்வாழ்க்கையென்றுணர்விரதத்தோறுறவா,ளீணடகொற்றவைவேறறொழுஞசிலர்வினைவிற்றேய்வதுவே, தாண்டணிசசிகிமேற்கொளுஞசிறுசாணசசேய்புகழா, லாண்டலைகொடிமாடசிதகியவருணைக்கோபுரமே. (௬௨)

வண்ணச்செய்யுளுநண்ணிச்சொல்பவர்வயிரப்பாறை
யையே, நெண்ணப்புலவாகண் முன்னுமறெரல்கிடு மிழி
வைசசாடுமதே, மணணைக்கெல்லியுமவிணணிற்றுள்ளி
யுமதமறுருநணரா, வண்ணறகைதொழும்வண்மைசசெ
ல்வாதமருணைகோபுரமே. (௬௫)

கோபுரத்துச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

வாழி.

பாரவாழிவானுலகும்பிலமும்வாழிபருப்பதங்கள்வா
ழியவைபலவுங்கொள்வான், போவாழிமாதவத்துப்பெ
ரியோர்வாழி பிறங்குதமிழ்ப்புலமைநலம்பெற்றோர்வா
ழி, யூரவாழியருணைநெடுஞ்சிகரிவாழியுயரருணகிரிநா
தனுரைக்கும்பாடற்,சீர்வாழிகவுமாரசமையம்வாழிதிரு
நீறுங்கண்டிகையுநந்தனமும்வாழி.

## அருணகிரிநாதசுவாமிகள்புராணம்
## முற்றிற்று.

நேரிசைவெண்பா.

பத்திவிளைவிப்படிநான்பாடுமிந்தக்காவியத்தைச் *
சத்தியமாசசெவ்வேளசரியென்றான, புத்தியுள்ளீ
ரையமுறவேண்டாமருணகிரிநாதனன்பான
மெய்யடிமையாகிமகிழ்வீர.... ....................*

## தெய்வமேதுணை.

# அருணகிரிநாதசுவாமிகள்புராணத்தின்

## செய்யுட்டொகைவிபரம்.


| | |
|---|---|
| பொதுப்பாயிரம்பாட்டு | ௯ |
| சிறப்புப்பாயிரம் | ௰௪ |
| ஷை சாத்துகவிகள் | ௰௩ |
| பூர்வபுண்ணியச்சருக்கம் | ௯௫ |
| திருவவதாரச்சருக்கம் | ௪௭ |
| மாயாவிநோதச்சருக்கம் | ௩௬ |
| அருட்பேற்றுச்சருக்கம் | ௪௨ |
| விலலிபுத்தூராழ்வார்கலகச்சருக்கம் | ௪௧ |
| சம்பந்தாண்டான்விகாதசசருக்கம் | ௫௬ |
| பாரிசாதச்சருக்கம் | ௩௯ |
| கிளிவாழக்கைசசருக்கம் | ௨௭ |
| கோபுரத்துச்சருக்கம | ௯௩ |
| வாழிவிருத்தம் | ௧ |
| நேரிசைவெண்பா | ௧ |


ஆகக்கவி—௪௱௫௰௪.

இப்புத்தகம்வேண்டியவர்கள் திருநெல்வேலி வடக்கனவரததானவிநாயகர் கோவிற்றெருவிற் சித்திரபுத்திரபிள்ளையவர்களிடத்தில் விலைகொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மகாமகோ[illegible]